செந்தமிழ்ச் செல்வி

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக
மணிவிழா ஆண்டு
1920 — 1980



அரசு...

சிலம்பு-ருச] வள்ளுவர் ஆண்டு-உ0கக, ஆனி July '80 [பரல்-கக

‘செந்தமிழ்ச் செல்வி’

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

உள்ளுறை

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருச	திருவள்ளுவர் ஆண்டு உ௦கக, ஆனி சூலை 1980	பரல் கக

வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள்

ஆன்றவிந்தடங்கிய அகத்தியன் வாழ்ந்த பொதிகை மலையைத் தன்னகத்தே கொண்ட தேன்தமிழ்த் தென்றல் வந்துலாவும் திக்கெலாம் புகழும் திருநெல்வேலிச் சீமை பைந்தமிழ்ப் பாவலர்களின் பாசறையாகும். செந்தமிழிலக்கணமான தொல்காப்பியத்திற்குப் புத்துரை கண்ட சிவஞானமுனிவர், கங்கைக்கரை சென்று காசியில் தங்கி, காசிக் கலம்பகம் பாடிய குமரகுருபரர், குறவஞ்சிக்கு இலக்கணமாகத் திகழும் குற்றலக் குறவஞ்சியைத் தந்த திரிகூடராசப்பக் கவிராயர் போன்றவர்கள் தோன்றிய நெல்லைச்சீமை தவத்திரு வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளையும் படைத்தருளியது.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகள் காலத்து வாழ்ந்து அவருடன் நெருங்கிப் பழகிய தண்டபாணியடிகள் பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய்த் தாம் படைத்த கவிதைகளையெல்லாம் மரபுவழி நின்று இலக்கிய இலக்கணச் செறிவுமிக்க பைந்தமிழ் நடையில் அமைத்ததால் ஆழ்ந்தகன்ற அறிவுடைய அறிஞர் பெருமக்களிடையே மட்டும் தம் பெயர் பரப்பிச் சென்றார். ஆனால் வள்ளலாரோ காலத்திற்கேற்ற இனிய, எளிய, எல்லோரும் புரிந்துகொள்ளக் கூடிய நடையில் தம் 'அருட்பா'க்களைப் பாடியதால் தமிழறிந்த மக்களனைவரும் அறிந்திருக்கும் வகையில் பெரும்புகழ் பரப்பி நின்றார். முழுமுதற் கடவுள் முருகனே என்று அக் குன்றக் குமரனையே வழிபடும் 'கௌமார சமயம்' காலூன்றி வேர்பரவக் காரணமாயிருந்தவர் தண்டபாணியடிகள். எல்லாத்

தெய்வங்களும் ஒரே நிலையினவே என்று (சமரச சன்மார்க்க) பொதுநிலை நல்வழி நெறியைப் பரப்பியவர் வள்ளலார். இவ்வாறு வள்ளற்பெருமானுடன் இணைத்து எண்ணப்பட வேண்டிய தண்டபாணியடிகளின் பெயர் தமிழகத்தில் கௌமார சமய வழிபாட்டினரிடம் மட்டுமே பரவியிருப்பது வருந்துதற் குரியதாகும்.

திருப்புகழ்ச் சுவாமிகளென வழங்கும் தண்டபாணியடிகள் தென்பாண்டி நாட்டுத் திருநெல்வேலி நகரில் 1839இல் தோன்றியவர். இளமையிலேயே முருகன் திருவருள் பெற்று எண்ணிலாத பாடல்களைப் பாடலானார். மும்மணிக் கோவை பல, மாலை பல, அந்தாதி மூவகைய பல, இன்னவாறு முதுநெறிப் பனுவல் பல, புதுநெறிப் பனுவல் பல, முத்தமிழ்ச் சுவை வழாமல் இம் மண்ணிற் புலவர் பலர் மகிழ்வுறக் கொடுத்தவர் தண்டபாணியடிகள். பெருகு புனல் வாரியில், கழுகுமலை வாவியில் பீடுமிகு பொருநை யாற்றில், நெல்லைநகர் வாய்க்காலில், புனலில், அனலில் விடுத்த தமிழ்க் கவிதைகள் போக, தண்டபாணியடிகள் பாடி அச்சிடப் பெறுமல் எஞ்சியிருப்பவை ஐம்பதினுயிரம் பாடல்கள்.

இத் தீந்தமிழ்ப் பாடல்கள் அனைத்தும் அடிகள் கைப்பட எழுதப்பெற்ற ஓலைச் சுவடிகளில் இன்றும் அவரது திருமடத்தில் பாதுகாத்து வைக்கப் பெற்றுள்ளன. அவர்தம் திருமடம் விழுப் புரத்திலிருந்து மூன்று கல் தொலைவிலுள்ள திருவாமாத்தூரில் உள்ளது. இரட்டைப் புலவர்களால் கலம்பகம் பாடப்பெற்றது அத் திருவூர். அவ் வூரில் பச்சைப்பசேலென்ற செந்நெல் வயல்களும் பசிய தென்னஞ் சோலைகளும் நிறைந்த பகுதியில் அப் பைந்தமிழ் நூல்கள் ஓலை வடிவில் பாதுகாக்கப் பெறுகின்றன. அடிகளின் பாடல்களில் ஒரு பாதி அளவே அச்சுப் பொறியேறின. எஞ்சிய அனைத்தையும் அச்சில் கொண்டுவர வேண்டுமென்ற நோக்குடன் அருளுள்ளம் கொண்ட பொருட் செல்வர்களை நாடி அவ்வப்போது சிறுசிறு நூல்களை வெளியிட்டு வருபவர் அடிகளுடைய பெயரராகிய அருட்டிரு முருகதாச அடிகள்.

முருகதாச அடிகள் தம் பாட்டனாரைப் போலவே இல்லறம் புக்குக் கடமைகளாற்றியபின் துவராடை பூண்டு, துறவற மேற்கொண்டவர். நல்ல இலக்கண இலக்கிய அறிவு நிரம்பியவர். பாட்டனாருடைய நூல்களின் அருமை பெருமையை நன்குணர்ந்தவர். அவற்றை அச்சில் பதிக்கவும் தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறவும் மிக்க தகுதி வாய்ந்தவர். ‘வண்ணச் சரபம்’ என்ற சிறப்புப் பெயருக்கு ஏற்ற வகையில் தண்டபாணியடிகள் பலவகைய சந்தக் குழிப்புகளுடன் கூடிய வண்ணப் பாடல்களைப்

பாடியுள்ளார். அவற்றை உரிய சந்த ஓசையுடன் பாடக்கூடிய ஆற்றல் நம் முருகதாச அடிகளிடம் மட்டுமே உள்ளது. அத்துடன் அப் பாடல்களுக்கு இலக்கியச் சுவைமிக்க உரை கூறும் பாங்கும் அவரிடம் உள்ளது. எனவே, வண்ணச் சரபத்தின் பாடல்களை அச்சிற் பதிப்பதுடன் அவ் வண்ணப் பாக்கள் அனைத்தையும் முருகதாச அடிகளைக் கொண்டு பாடச் செய்து பதிவு செய்து வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் இவற்றை உரிய சந்தத்துடன் பாடத்தக்கவர் கிடைப்பது அரிதாகி விடும் என்பது உறுதி.

அவ்வகையில் முருகதாச அடிகளுடைய நெருங்கிய உறவினர் என்ற முறையில் கழக ஆட்சியாளர் செந்தமிழ்ச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள் ஒரு சில பாடல்களை நாடாப் பதிவு செய்து வைத்துள்ளனர். முருகதாச அடிகளின் திரு மகளான காமாட்சியம்மையைக் கழக ஆட்சியாளரின் மகன் முறையினரும் கப்பலோட்டிய தமிழரான வ. உ. சிதம்பரம்பிள்ளை யின் பேரன் முறையினருமான திரு. நடராசன் திருமணம் செய் துள்ளார். இத் திருமணத்தை நிகழ்த்தியவரே ஆட்சியாளர் அவர்கள்தாம். தண்டபாணியடிகளுக்கு நெல்லையில் ஒரு சில ஆண்டுகளுக்கு முன் ஆட்சியாளர்அவர்கள் ஒரு பெருவிழாவே நடத்தினர்கள்.

தண்டபாணியடிகளுடைய பாடல்களை அச்சிட்டு நூலாக்கும் தொண்டு தொடர்ந்து நடைபெறுகிறது, அண்மையில் அவர் தம் 82ஆவது குருபூசை விழாவின்போது மூன்று நூல்கள் வெளியிடப்பெற்றன. திருவாமாத்தூர் கௌமார மடாலயத்தில் 1—7—80அன்று குருபூசையை ஒட்டிச் சிரவையாதீனம் தவத் திரு. சுந்தர சுவாமிகள் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் தவத்திரு தண்டபாணியடிகளின் 'வண்ணமஞ்சரி', 'திருமகளந்தாதி', 'ஞாயிறு ஆயிரம்' ஆகிய மூன்று நூல்களும் வெளியிடப்பெற்றன. வண்ணமஞ்சரி நூலைத் தொழிற்செல்வர் திரு நா. மகாலிங்கம் அவர்கள் வெளியிட முதல் இதழைக் கவிஞர் திரு. த. கோவேந்தன் அவர்கள் பெற்றுக்கொண்டார். திருமகளந்தாதியைத் திருமிகு. கு. வரததேசிகன் அவர்களும் ஞாயிறு ஆயிரம் நூலினைப் பேரூர் ஆதீனம், தவத்திரு. சாந்த லிங்க இராமசாமி அடிகளார் அவர்களும் வெளியிட்டனர்.

வண்ணமஞ்சரி, திருமகளந்தாதி ஆகிய இரு நூல்களையும் அச்சிடும் செலவினைச் சென்னை, வண்ணையம்பதி சைவத்திரு. வி. முருகேசஞ்செட்டியார், அவர்கள் மனமுவந்து ஏற்றுக்கொண்

டுள்ளனர். ஞாயிறுஆயிரம் நூலினைச் சென்னைத் தமிழ்ப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

இன்னும் அச்சுஏருத நூல்களும் பாடல்களும் பல உள்ளன. அன்னை சக்தியின்மீது பாடப்பெற்ற ‘சக்தி ஆயிரம்’ என்னும் நூலினை அச்சிடும் செலவைத் தாம் ஏற்றுக்கொள்வதாக வள்ளல் நா. மகாலிங்கம் அவர்கள் விழாவில் அறிவித்துள்ளார். முருகனைப் பற்றிய மூவாயிரம்பாடல்களைத் தொகுத்துக் கவிஞர் த.கோவேந்தன் அவர்கள் பதிப்பிட விரும்புகிருர். அவற்றை அச்சிடும் பொறுப்பை ஏற்று அறநிலைய ஆணையர் உயர்திரு. யு. சுப்பிரமணியம் அவர்களின் ஆணையின்கீழ் உள்ள சென்னை வடபழனித் திருக்கோயில் தெய்வத்தானத்தினர் முன் வந்துள்ளனர். இவை அனைத்தும் விரைவில் நிறைவேறத் தமிழ்க்கடவுள் முருகன் அருள்புரிவாஞக.

நூல்களை அச்சிடுவதென்பது மிக அரியபணி. ஓலைச் சுவடியிலுள்ள நூல்களை அச்சிடுவது அதனினும் அரிய பணி. சுவடியிலுள்ளதைப் பாங்குறப் படித்துப் பழுதறப் படியெடுக்கும் பணி எல்லோருக்கும் கைகூடுவதன்று. தண்டபாணியடிகளின் நூல்களைச் சுவடியினின்று பெயர்த்தெழுதும் பணியில் அவர்தம் பெயரரான முருகதாச அடிகளும் அவர்தம் குமாரரான புலவர் திரு தி. மு. சங்கரலிங்கம் அவர்களும் ஈடுபட்டுள்ளனர். திரு. சங்கரலிங்கனுர் விழுப்புரம் அரசுப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிவருகிருர். இவ்விருவரும் எவ்வளவு விரைந்து படியெடுக்கும் பணியை முடிக்கிருர்களோ அவ்வளவும் தமிழ்த்தாய்க்கு நன்மையாகும். அவர்களும் ஒரு நூலை யாராவது அச்சிட முன் வந்தால்தான் விரைந்து படியெடுக்கிருர்கள். எனவே செல்வர்களும் அரசும் துணைநின்று தண்டபாணியடிகளின் பாடல்கள் அனைத்தும் அச்சிடப்பட்டு வெளிவருவதற்குப் பாடுபடவேண்டுமென்பது வேண்டுகோளாகும். இது நிறைவேறத் தமிழ்மக்களும் தங்களாலியன்ற பொருளுதவியைச் செய்யவேண்டும்.

புதிய நூல்களை அச்சிடுவதுடன் ஒருமுறை அச்சாகி, மீண்டும் அச்சிடப்பெருமலும் கிடைக்காமலும் உள்ள பழனித் திருவாயிரம், தில்லைத்திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், புலவர் புராணம், பல்வேறு கலம்பகங்கள், பிள்ளைத் தமிழ்கள், புராணங்கள் போன்றவற்றை மீண்டும் அச்சிட வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பெறவேண்டும். தண்டபாணியடிகளின் புகழ் பரவ, அவர்தம் எழுத்தோவியங்கள் பாதுகாக்கப்பெற அனைவரும் பாடுபடவேண்டும்.

———

தெ. பொ. மீ.யின் திரிபாராய்ச்சி

[ஞா. தேவநேயன்]

(முன் இதழ் சஎடுஆம் பக்கத் தொடர்ச்சி)

கூற்று :

மொழிமரபு

"அடுத்த இயல் மொழிமரபு. இதில் அவர் இ, உ, ஆய்தம் என்னும் மூன்றன் குறுக்கங்களாகிய புணரியல் வேறுபாடுகளைக் கூறுகிறார். அம் மூன்றும் தனிச்சொற்களிலும் புணர்ச் சொற்களிலும் நிகழ்கின்றன. சமற்கிருதப் புலுதம் (ப்லுத) என்னும் உயிரளபெடையை அறிந்துகொண்டு, இருமாத்திரைக்கு மேலொலிக்கும் நெட்டுயிர் தமிழில் இல்லையென்று ஏற்கனவே வாசகரை எச்சரித்திருக்கின்றார். ஆயின், ஆறும் நூற்பாவிற் கூறியுள்ளதையே ஏன் இங்குத் திருப்பிக் கூறவேண்டுமென்பது தெளிவாயில்லை. ஒருகால், அளபெடை உயிர்நெடிலின் புணரியல்வேறுபாடாக நிகழ்கின்றதென்று இங்குக் கூறுகின்றார் போலும்!"

மறுப்பு :

தொல்காப்பியம் இடைக்கழகக் காலத்தில் இயன்ற பல்வேறு தனித்தமிழ் முன்னூல்களினின்று தொகுத்த தொகைச் சார்பு நூலாதலின், வடமொழிப் புலுத அறிவைக்கொண்டு,

> "மூவள பிசைத்தல் ஓரெழுத் தின்றே." (எழுத். 5)

என்று தொல்காப்பியர் கூறினார் என்னுங் கூற்று, கூற்றுப் போறற்கொடியதே.

> "எழுத்தெனப்படுப........முப்பஃதென்ப" (எழுத். 1)
>
> "அ இ உ எ ஒ.........குற்றெழுத்தென்ப." (ஷை 3),
>
> "ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ.........நெட்டெழுத்தென்ப." (ஷை 4),
>
> "நீட்டம் வேண்டின்.........என்மனார் புலவர்." (ஷை 6)

என்று பலர்பாலிலேயே தமிழமுன்னூலாரைத் தொல்காப்பியர் குறித்திருத்தல் காண்க.

"ஈரள பிசைத்தல் ஓரெழுத் தின்றே" என்று வரையறுத்ததனால், அதற்கு விலக்காக வரும் சிறுபான்மை நிகழ்ச்சியான

அளபெடையை மாணவன் அறிதற்பொருட்டு, அதனையடுத்து, "நீட்டம் வேண்டின்......என்மனார் புலவர்," என்று பொதுப்படச் சுருக்கிக் கூறினர். ஆயின், உயிரளபெடை என்று எவ்வாறு நிகழுமென்றும், அதற்கு அடையாளம் எதுவென்றும், எத்தனை மாத்திரையென்றும், விரிவாகத் தெரியவேண்டுதலின், அவற்றை இங்கு மொழிமரபிற் கூறினர். எழுத்தின் தனிநிலை பற்றியது எழுத்தியல்; அதன் சொன்னிலை பற்றியது **மொழியியல்.**

ஓரெழுத்துச் சொல்லாயின், தனிநிலையிலும் இருவகை வழக்கிலும் அளபெடை நிகழும்.

எ - டு: ஏஎஎஎ அண்ணா!—உலகியலளபெடை
"ஓஒ இனிதே" (குறள். 1176)—செய்யுளியலளபெடை

கூற்று :

"ஒலியியற்சொல்லைப் பின்னர் ஆயத்தொடங்கி ஓரெழுத்துச் சொல், ஈரெழுத்துச்சொல், மூவெழுத்துச்சொல் என அதை மூவகையாக வகுக்கின்றார். அதன்பின் முதலெழுத்துக்களைப் பற்றிக் கூறுகின்றார். மகரக்குறுக்கம் மீண்டும் ஒருமுறை சொல்லப் படுகின்றது. ஐகாரக்குறுக்கமும் சொல்லப்படுகின்றது மூன்றிற்கு மேற்பட்ட புணரியல் எழுத்து வேறுபாடுகளை அவர் ஒப்புக் கொள்ளாவிடின், இக் குறுக்கங்களை இவ்விடத்திற் கூறுவது பொருந்தாது. பிற்காலத்தார் ஐகார ஔகாரங்களை நெடில்களாகச் செய்யுளில் ஆள்வதன் இடர்ப்பாட்டை உணர்ந்தபோது, போலிக் கொள்கையைப் புகுத்தியிருத்தல் வேண்டும்."

மறுப்பு :

மகரக்குறுக்கத்தை மொழிமரபிற் கூறியது, கூறியது கூறல் என்னுங் குற்றமன்று. நூன்மரபில் எழுத்துக்களின் மாத்திரையளவைக் கூறுமிடத்து, மகரக்குறுக்க மாத்திரை காலென்று கூற நேர்ந்தது. **மொழிமரபில்** மகரக்குறுக்கம் நிகழும் இடத்தைச் சொல்ல வேண்டியிருந்ததனால்,

"செய்யு ளிறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற் றாகும்." (18)

"னகாரை முன்னர் மகாரங் குறுகும்." (19)

என்றார் ஆசிரியர். ஈரிடத்தும் கூறவேண்டியது கூறலேயன்றிக் கூறியது கூறலன்று.

"அரையளவு குறுகல் மகர முடைத்தே
இசையிடன் அருகும் தெரியுங் காலை." (நான். 13)

"உட்பெறு புள்ளி யுருவா கும்மே." (ஷ 14)

என்னும் இவ்விரு நூற்பாக்களையும், மேற்கூறிய மொழிமரபு நூற்பாக்களுடன் ஒப்புநோக்கி உண்மை காண்க.

தொல்காப்பியத்தின் முன்னூல்களான தனித்தமிழ் நூல்களெல்லாம், இயல்பான தமிழெழுத்துக்களை மொத்தம் முப்பதென்றே கொண்டு, அவற்றுள் நான்கின் இடவேறுபாட்டாலும் புணர்ச்சி விளைவாலும் ஏற்பட்ட முத் திரிபொலிகளைச் சார்பெழுத்துக்களென்றும், இயல்பான மூலமுப்பதையும் முதலெழுத்துக்களென்றும், வேறுபடுத்தி வழங்கினும், முதலெழுத்துக்களையே முதன்மையாகக் கருதினவென்பது,

"எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர விறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே."

என்னும் தொல்காப்பிய முதல்நூற்பாவால் அறியக் கிடக்கின்றது.

எல்லா மெய்யொடுங்கூடா ஈருயிரும் உயிரேறா ஒருமெய்யுமான முச்சார்பெழுத்துக்களுள் இரண்டு சற்றுக் குறுகியொலிப்பினும், ஒலித்திரிபே சார்பெழுத்துக்களின் சிறப்பியல்பாம். பிற்காலப் பதின்மூன்றாம் நூற்றாண்டினரான நன்னூலார், ஒலிக்குறுக்கமும் நீட்டமும் கலப்புமான இயல்புகளையுஞ் சேர்த்து, சார்பெழுத்துப் பத்தென விரித்தார். இக் கொள்கை தொல்காப்பியருக்கில்லை. ஆயின், ஒலித்திரிபு போன்றே ஒலிக்குறுக்க நீட்டமும் சொன்னிலைக் குரியவாதலின், அவற்றை மொழிமரபிற் கூறினார். ஆதலால், மகரக்குறுக்கமும் ஐகாரக்குறுக்கமும் கூறுவதற்கு மொழிமரபே தக்க இயலாம்.

"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔஎனும்
அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப." (4)

"அகர இகரம் ஐகார மாகும்." (54)

"அகர உகரம் ஔகார மாகும்." (55)

என்று தொல்காப்பியம் கூறுவதால், ஐகார ஔகாரங்கள் தனிநிலையில் இன்றும் இருமாத்திரை நெடிலே.

''ஈரள பிசைக்கும் இறுதிஇல் உயிரே

....

குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்.'' (766)

என்பதனல்,

''ஐவியப் பாகும்.'' (868)

என்னுமிடத்தும், ஐகாரம் இருமாத்திரை நெடிலேயாதல் வேண்டும்.

இனி, ஐகார ஔகாரம் சொல்லுறுப்பாக வந்து மாத்திரை குறையினும், செய்யுளில் எதுகை நோக்கி அய், அவ் என வரிமாற்றத் தேவையில்லே.

''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப.'' (1091)

என்னும் நூற்பாவில், ஐயர் என்னும் வடிவமே தொன்றுதொட்டு மூலத்திலும் உரையிலும் வழங்கிவருதல் காண்க.

கூற்று :

''யகரத்தின் மட்டிட்ட வழக்கு வேரோரிடத்திற் குறிக்கப் பட்டுள்ளது. சகரமெய் அகரத்தொடும் ஐகார ஔகாரங் களோடும் கூடி வருவதில்லே. அகரத்தொடு வராமைக்குக் காரணம், அண்ணமெய்யாகிய சகரத்தின் பின்வரும் அகரம் அண்ணவுயிராகிய எகரமாகத் திரிந்துவிடுவதே. இது தொல் காப்பியர் கால மொழிநிலேயைக் குறிக்கின்றது. அந்நிலே பல சகர முதற்சொற்கள் வந்துள்ள கழக இலக்கியக் கால நிலேயினின்று வேறுபட்டதாயிருத்தல் வேண்டும்.

மறுப்பு :

தொல்காப்பியர் காலத்திற் சகரமுதற்சொல் ஒன்றேனும் தமிழில் வழங்கவில்லேயென்பது சற்றும் பொருந்தாது. சக்கரம், சகடம் முதலிய ஒருசில (வடமொழி தென்மொழியாகிய) இரு மொழிப் பொதுச்சொற்களே நீக்கினும், பெருவாரி உலகவழக்கும் இன்றியமையா அடிப்படையுமான சக்கு, சக்கை, சகதி, சங்கு, சச்சரவு, சட்டம், சட்டி, சட்டு, சட்டை, சடங்கு, சடார், சடை, சடைவு, சண்ணு, சண்பு, சண்டி, சண்டு, சண்டை, சணுய், சதக்கு, சதுப்பு, சதை, சந்து, சந்தை, சப்பட்டை, சப்பளி, சப்பாணி, சப்பு, சப்பை, சம்பளம் சம்பா, சம்மணம், சமட்டி, சமம், சமழ், சமை, சர், சரசர, சரட்டு, சரள், சரி, சருகு, சருவு, சரேல், சல்லி, சலக்கு, சலசலப்பு, சலங்கை, சலவை, சலி, சவ்வு, சவட்டு, சவர், சவளி, சவை, சழக்கு, சழி, சள், சள்ளே, சளப்பு, சளார், சளி

சற்று, சரும்பு, சறுக்கு, முதலிய ஏராளமான சகரமுதற்சொற்கள் தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னரே தமிழில் தோன்றின என்பது, எள்ளளவும் இயற்கைக்கு ஏற்காது. ஆரியர் வந்த காலத்தினின்று ஆங்கிலர் வந்த காலம்வரை, தமிழுக்குப் படிப்படியாக மேன்மேலும் கேடு நேர்ந்ததேயன்றி ஆக்கம் நேரவில்லை. தம்மைச் 'சூத்திரர்' என்றும், தம்மொழியை இழிந்தார் மொழியென்றும் தாமே தாழ்த்திக்கொண்டு, ஆரியரை நிலத்தேவரென்றும் அவரது இலக்கியமொழியைத் தேவமொழியென்றும் நம்பி, இயன்றவரை தமிழ்ச்சொல்லை வழக்குவீழ்த்திச் சமஸ்கிருதச் சொல்லையே மகிழ்ச்சியோடும் பெருமிதத்தோடும் வழங்கிவந்த அடிமைத் தமிழர், எங்ஙனம் புதுத்தனித்தமிழ்ச் சொற்களைப் புனைந்திருத்தல் கூடும்?

ஆகவே, கடைக்கழகக்காலச் சகரமுதல் தமிழ்ச்சொற்களெல்லாம் ஆரியர் வருகைக்கு முற்பட்ட பழங்காலத்தனவே, இதை,

> ''சரிசமழ்ப்புச் சட்டி சருகு சவடி
> சளிசகடு சட்டைசவளி—சவிசரடு
> சந்து சதங்கை சழக்கா தி யீரிடத்தும்
> வந்ததனுற் சம்முதலும் வை.''

என்னும் மயிலைநாதருரை மேற்கோளாலும் தெளிக.

இனி, துடிசைகிழார் அ. சிதம்பரனுர் கருத்துப்படி,

> ''சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
> அஐ ஔ எனும் மூன்றலங் கடையே''. (தொல்.மொழி. 27)

என்னும் நூற்பாவின் ஈற்றடிக்கு,

''அவை ஔ என்னும் ஒன்றலங் கடையே.'' என்னும் பாடவேறுபாடு கொண்டு, ஔ என்னும் ஓ நயிரொழிந்த ஏனைப் பதினேருயிரொடுங் கூடிச் சகரமெய்யும் சொன்முதலாம் என்று பொருள் கூறின், சகரக்கிளவித் தொல்காப்பிய நூற்பா இம்மியும் மயக்கிற்கும் மறுப்பிற்கும் இடமின்றித் தெளிதலும் காண்க.

கூற்று :   பிறப்பியல்

''பிறப்பியல் எழுத்துக்களின் ஒலிப்புமுறையைப் பற்றிக் கூறுகின்றது. அதன் இறுதி நூற்பா, அவர் நோக்குப் புறநோக்காக வுள்ளதென்றும், ஒலிப்புமுறைக்கு முன் நிகழ்வதை வண்ணிக்கவில்லையென்றும், கூறுகின்றது. ஒலிப்பு முறைக்கு முற்பட்ட நிலைகள்பற்றிய பல செய்திகள் அந்தணர் மறையில் வண்ணிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடுகின்றார். சமஸ்கிருத ஆசிரியர்

கொள்கையை அவர் அறிந்திருந்ததை இது தெளிவாகக் குறிக்கின்றது.''

விளக்கம் :

"இது பிறன்கோட் கூறல் என்னும் உத்திக்கு இனம். என்னை? உந்தியில் எழுந்த காற்றினைக் கூறுபடுத்தி, மாத்திரை கூட்டிக்கோடலும், மூலாதாரம் முதலாகக் காற்றெழுமாறு கூறலும் வேதத்திற்கு உளதென்று இவ்வாசிரியர் கூறி, அவர் மதம்பற்றி அவர் கொள்வதோர் பயன் இன்றென்றலின்.'' என்னும் நச்சினார்க்கினியர் கூற்று, இந் நூற்பாவின் தேவையின்மையையும் பயனின்மையையுமே குறிக்கின்றது.

''உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான.''

என்று பிறப்பியல் முதல் நூற்பாவிற் கூறிய முகவுரையே, ஒலிப்பு முறைக்கு முற்பட்ட நிகழ்ச்சியைத் தெரிந்துகொள்ளப் போதுமானதாம்.

நுண்ணொலி (சூக்குமை), பருவொலி (பைசந்தி), இடையொலி (மத்திமை), எழுத்தொலி (வைகரி) என்று, ஆரியச் சிவக் கொண்முடிபு கூறும் நால்வகையொலியுள், முதல் மூன்றும் அறிவியலோடு பட்டவையல்ல.

தனியெடுப்பொலியும் மூச்சொலியும் தமிழுக்கின்மையின், அவற்றின் பிறப்பைப் பற்றியும் தமிழிலக்கணத்திற் கூறவேண்டியதில்லை.

''இன்பமும் பொருளும் அறனும் என்றாங்
கன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணுங்காலை
மறையோர் தேஎத்துமன்றல் எட்டனுள்
துறையமைநல்யாழ்த் துணைமையோர் இயல்பே''

(தொல். கள, 1)

என்பது போன்ற பல பிற நூற்பாக்கள் தொல்காப்பியரின் சமஸ்கிருத அறிவைத் தெரிவிக்கப் போதுமானவை.

ஆதலால், பிறப்பியல் இறுதி நூற்பா 'நின்றுபயனின்மை' என்னும் குற்றத்தின் பாற்பட்டதே.

———

பாடிப் பறந்த குயில்!

[புலவர் திரு. பொதிகைச்செல்வன், பவானி.]

நம் செந்தமிழ்த் திருநாட்டில் முத்தமிழ்த் தெய்வமாய் விளங்கும் முருகக்கடவுளைப் போற்றிப் பாடாத புலவர்களே இல்லை எனலாம். சங்க காலத்து நக்கீரர் முதல் நம் காலத்துப் பாரதியார் வரை முருகக்கடவுளைப் போற்றிப் பாடிய புலவர்கள் பலர் ஆவர். ஒவ்வொரு புலவரும் முருகக் கடவுளின் மாட்சியைத் தம் பாக்களில் எத்தனை எத்தனை வகைகளில் எல்லாம் சிறப்பித்துப் பாடியுள்ளனர். எத்தனை எத்தனை வகையான புத்தமுதப் பாடல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

நக்கீரர் தம் திருமுருகாற்றுப்படையில் காட்டும் முருகன் மாட்சியே தனியழகு வாய்ந்ததாகும். ஆறுபடை வீடுகளிலும் முருகன் எழுந்தருளி அருள் வழங்கும் அழகுத் திருக்கோலத்தை எப்படி எப்படியெல்லாம் பாடியிருக்கிறார் நக்கீரர். அவர் காட்டிய ஆறுபடை வீடுகளில் 'குன்று தோறாடல்' என்பதும் ஒன்றாகும். குறிப்பிட்ட சில இடங்களில் முருகன் உறைவான் என்றாலும், எல்லாக் குன்றுகளுமே முருகன் உறைவிடங்கள்தாம் என்பதே குன்றுதோறாடல் என்பதற்குப் பொருளாகும். முருகன் குறிஞ்சிக் கிழவன் அல்லவா? எனவே, எல்லாக் குன்றுகளிலும் அவன் இருப்பான் என்பதில் என்ன வியப்பு?

நெல்லை மாவட்டத்திலுள்ள கழுகுமலை என்பது முருகன் கோவில் கொண்டுள்ள திருப்பதிகளுள் ஒன்றாகும். இவ்வூர் நெடுஞ் சாலையில் சங்கரன் கோவிலுக்கும், கோவிற்பட்டிக்கும் இடையில் இருக்கிறது. மலையின் அடிவாரத்தில் குடைவரைக் கோயிலாக முருகன் திருக்கோயில் மிகவும் அழகாக அமைக்கப் பட்டுள்ளது. கோயில் மிகவும் பழைமை வாய்ந்ததாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த தமிழ்ப்பெரும் பாவலராகிய அண்ணாமலைரெட்டியார் என்பவர் கழுகுமலை முருகன் மீது காவடிச்சிந்து என்னும் சிறந்த நூல் ஒன்று பாடியுள்ளார். இது அளவிலும் நூல் அமைப்பு முறையிலும் சிறு பிரபந்தமாக—சிற்றிலக்கியமாக—இருந்தாலும் புதுமைச் சிறப்பாலும், கவிதை நயத்தாலும் பல பேரிலக்கியங்களையும் வென்று விளங்கும் பெருமை உடையது.

இந்தக் காவடிச்சிந்தைப் பாடிய அண்ணாமலைரெட்டியார் கழுகுமலையிலிருந்து 10-கல் தொலைவிலுள்ள சென்னிகுளம்

என்னும் சிற்றூரில் பிறந்தவர். இவ்வூர் சங்கரன்கோவில் வட்டத்தில் கரிவலம்வந்த நல்லூருக்குக் கிழக்கே ஒன்றரைக்கல் தொலைவிலுள்ளது.

ஊற்றுமலை சமீன்தார் இருதயாலய மருதப்ப பாண்டியனின் அரசவைப் புலவராக! விளங்கிய அண்ணாமலைரெட்டியார் இக் காவடி சிந்தை இயற்றி வெளியிட்ட சில நாட்களிலேயே அவரது புகழ் குன்றிலிட்ட விளக்குப்போல் தமிழகம் எங்கும் பரவுவதாயிற்று. இவ்வாறு அவரின் புகழ் பரவக் காரணம் என்ன? அவர்தம்காவடிச்சிந்து அவ்வளவு எளிதான ஒரு நூல் அன்று! தமிழுக்கே புதுமையான ஒரு நூலாகும்; இக் காவடிச்சிந்திலுள்ள 22 பாடல்களும் 22 இசையமைதிகளைக் கொண்டவை. 22 பாடல்களும் தமிழுக்கே புதுமையான யாப்பமைதியைக்கொண்டு பிறந்தவையாகும். இசைச்சிறப்பால் கல்லையும் கனியாக்கும் கனிவும், கல்லாதவரையும் ஈர்க்கும் கவர்ச்சி ஆற்றலும் கொண்டவையாகும். தமிழின் மரபுவழி இசையைக் கொண்டவையெனினும் புதுமை யாப்பமைதியும், அதனால் பிறந்த இசையமைதியும் பொருந்திய சிந்துப் பாடல்களாகும். மேலும் சொற்பொருட் சிறப்பும், எதுகை, மோனை, இயைபு முதலிய தொடைச்சிறப்புக்களும், எளிய பேச்சு வழக்குச் சொற்களும், இனிய கவிதைச் சொற்களும் இணைந்து ஆற்றொழுக்கைப் போன்ற அழகிய நடைச்சிறப்பும், அகப்பொருள்துறை அமைதிகளும் பக்தி உருக்கமும், இயற்கை வருணனைப் பெருக்கமும்கொண்டு இலங்கும் இந்நூல் தமிழின்பம் ததும்பும் தகுதி சான்றது. எனவேதான், இச் சிறுநூல் தோன்றிய சிறிது காலத்திலேயே அண்ணாமலைரெட்டியார் தமிழகம் அறிந்த பெரும் புலவராக மதிக்கப்பெற்றார். ஒருசமயம் எட்டையபுரம் அரசவையில் கூடிய புலவர் பெருமக்களால், "இக் காவடிச் சிந்துபோல் எவராலும் பாட இயலாது" என்று முடிவு செய்யப் பட்டதாகவும் குறிப்பிடத்தக்க ஓர் உண்மைச் செய்தி உண்டு. தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள், "முருகன் அல்லது அழகு" என்னும் தமது உயரிய நூலில் "முருகு உறையும் நூல்களுள் அண்ணாமலைரெட்டியார் இயற்றிய காவடிச்சிந்தும் ஒன்று" என்றெழுதிப் பாராட்டியதிலிருந்தும் இதன் சிறப்பினை உணரலாம். மேலும் தற்காலத் தமிழ் மறுமலர்ச்சிப் பாவலர்களாகிய கவியரசர் பாரதியார், பாவேந்தர் பாரதிதாசனார், கவிமணி தே. வி. நாமக்கல் கவிஞர், கவியோகி சுத்தானந்தபாரதியார் முதலிய கவிஞர் பெருமக்கள் பலரும் இக் காவடிச்சிந்தின் இசையிலும், யாப்பமைதியிலும் பாடல்கள் பாடியுள்ளனர் எனில் இதன் பெருமையை என்னவென்று சொல்வது ? இனி இக் காவடிச்சிந்தில

சில எடுத்துக்காட்டுகள் காட்டி இக்கட்டுரையை முடிக்க விரும்பு கிறேன்.

முருகன் செந்தமிழ்த்தெய்வம் என்று போற்றப்படுபவன். முருகனுக்கும் தமிழுக்கும் உள்ள உறவை அருணகிரியார், ''முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன்'' என்று பாடினுர். அம்மரபு போற்றி ரெட்டியார் பாடுகிருர்.

தெள்ளுதமி ழுக்குதவு சீலன்—துதி
செப்பண்ணு மலைக்குமனு கூலன்—வளர்
செழியப் புகழ்விளைத்த கழுகு மலைவளத்தைத்
தேனே!—சொல்லு—வேனே!

என்று பாடத் தொடங்கியவர் கழுகுமலைவளத்தை எப்படி எல்லாம் பாடுகிருர்! அடடா! அதைப் பாடித்தான் உணர வேண்டும். கழுகுமலையிலுள்ள மாட கூட மாளிகைகளின் சிறப்பைப் பாடுகிருர்.

வெள்ளிமலை யொத்தபல மேடை—முடி
மீதினிலே கட்டுகொடி யாடை—அந்த
வெய்யவன் நடத்திவரும் துய்யவிர தப்பரியும்
விலகும்—படி—இலகும்'

இதைவிட மாளிகைகளின் சிறப்பை உயர்வு நவிற்சியாகச் சொல்லவா முடியும்? கழுகுமலையின் செல்வச் செழிப்பையும், கல்விச்சிறப்பையும் பாடுகிருர் கேளுங்கள் :

சித்தசித்த முங்கணவ ரோடும்—கூடி
நேசத்தாற் பிணங்கிமனம் வாடும்—கரு
நீலவிழி யார் வெறுத்த கோலமணி மாலைரத்னம்
நெருங்கும்—எந்த—மருங்கும்!

சேயிழையார் தம் கணவருடன் கொண்ட ஊடலால் வெறுத்து அறுத்து எறிந்த நவமணிகள் தெருவெல்லாம் சிதறிக்கிடக்கின் றனவாம்! என்னே செல்வச்செழிப்பு! குழைகொண்டு கோழியெறி வார் வாழ்க்கை வளத்தையும் விஞ்சிவிட்டது இது.

கல்விநிலை எப்படி கழுகுமலையில் ?

முத்தமிழ்சேர் வித்வ வசனக் கூட்டம்—கலை
முற்றிலும் உணர்ந்திடுங்கொண் டாட்டம்—நெஞ்சில்
முன்னுகின்ற போதுதொறும் தென்மலையில் மேவுகுறு
முனிக்கும்—அச்சஞ்—சனிக்கும்!

முத்தமிழும் தேர்ந்த புலவர்கள் கூட்டமாம்! எல்லாக்கலைகளையும் உணர்ந்துவிட்டோம் என்ற கலை கொண்டாட்டமாம்! அவர்களை நினைத்தாலே தமிழுக்கே முதல் இலக்கணம் தந்தவர் என்ற சிறப்புக்குரிய அகத்திய முனிவருக்கும் கூட மனத்தில் பயம் தோற்றுமாம்! அகத்தியரினும் அறிவிற்சிறந்த புலவர்கள் பலர் அவ்வூரில் வாழ்கிறார்களாம்! இப்படிப் பலபல சிறப்புக்களைப் பாடி வந்தவர் இறுதியில்,

> *கள்ளவிழ் கடப்பமலர் வாதன்—குறக்*
> *கன்னியை விரும்பிடும்வி வேகன்—வளர்*
> *கழுகு மலைநகரின் வளமையென் னுவிலடங்*
> *காதே—மட—மாதே!*

என்று முடிப்பதில்தான் எத்தனை நயம் தோன்றுகிறது. பாடிப் பாருங்கள்!

அடுத்துக்கோயில் வளம் பாடுகிறார். எடுத்த எடுப்பிலேயே முருகன் பெருமையைப் பாடுகிறார். என்ன பெருமையாம்? இவரின் காவடிச்சிந்தாம் கவின் மலரைத் தோளில் புனைவதுதான் கழுகு மலை முருகனுக்குள்ள பெருமையாம்! அடுத்து, பெருமையுடையவராய்ப் பாடிவரும் அடியார்களுக்கு வரம் அருளும் முருகன் கோயிற் பெருமையை நான் மறவாமல் சொல்லுகிறேன் என்கிறார். அவரின் அமுத வாக்காலேயே கேளுங்கள்.'

> *சென்னி குளநகர் வாசன்—தமிழ்*
> *தேறும் அண்ணாமலை தாசன்—செப்புஞ்*
> *செகமெச்சிய மதுரக்கவி யதனைப்புய வரையிற்புனை*
> *தீரன்—அயில்—வீரன்*
>
> *வண்ண மயில்முரு கேசன்—குற*
> *வள்ளி பதம்பணி நேசன்—உயர்*
> *வரமேதரு கழுகாசல பதிகோயிலின் வளநான்மற*
> *வாதே—சொல்வேன்—மாதே*

முருகனை வழிபட வரும் அடியார்கள் பாடியும் ஆடியும் ஆவேசத்துடன் வருகிறார்களாம். அவர்கள் பாடுவது என்ன பாட்டு? அருணகிரியார் அருளிய திருப்புகழைத்தான் பாடி வருகிறார்களாம். அப்பாடலின் ஓசை இமையவர் செவியையும் அடைக்குமாம். இவ்வுலகத்தையே உடைக்குமாம். அந்த முழக்கம் முருகா, முருகா என்று அடியார்கள் உள்ளம் உருகி ஓலமிட்டு வருகிறார்கள். பலர் தங்கக் காவடிகளைத் தோளில் வைத்து ஆடி வருகிறார்கள்'—முருகன் மீது கொண்ட பற்றினால் கனலிலிட்ட மெழுகுபோல் உள்ளம் உருகி வருகிறார்கள். அவர்கள் முருகன்

அருளால் உயர்நீதியும் இன்பமும் பெறுகிறுர்கள். அதைச் சிந்து இசையில் அவர் பாடும் அழகை உங்களின் செவிகளிற் பருகுங்கள்:

அருண கிரிநாவிற் பழக்கம்—தரும்
அந்தத் திருப்புகழ் முழக்கம்—பல
அடியார்களாம் மொழிபோதினி லமராபதி இமையோர்செவி
அடைக்கும் அண்டம்—உடைக்கும்!

கருணை முருகனைப் போற்றித்—தங்கக்
காவடி தோளின்மேலேற்றிக்—கொழுங்
கனலேறிய மெழுகாய்வரு பவரேவரு மிகவேகதி
காண்பார் —இன்பம்—பூண்பார்.

கவிஞர் தாம் பிறந்த ஊரின் பெருமையையும் தம் உள்ளத்தின் பெருமையையும் முருகனின் பெருமையையும் இரண்டடிச் சிந்தில் எப்படிப் பாடுகிறுர் பாருங்கள் :

பொன்னுலவு சென்னிகுள நன்னகரண் ணுமலைதன்
புந்தியில் மகிழ்ந்துநித்தம் நின்றவன்;—முந்தி
வெந்திற வரக்கர்களை வென்றவன்—மயில்

போல வேனலின் மீதுலாவு கிராதமாதுமு னேகியேயடி
பூவையே உனதுதஞ்சம் என்றவன்—அவள்
ஈயுமா வினையுமென்று தின்றவன்.

கவிஞரின் ஊர்ச்சிறப்பைக் கேட்டீர்களா?'' பொன்னுலவு 'சென்னிகுள நன்னகராம்'' ஆம்: கவிஞரின் இந்த வாக்கிற்குப் பிறகே அது பொன்னுலவு சென்னிகுளமாக மாறியது என்று அவ்வூர்ப்பெரியோர்கள் பலர் நேரிற்சொல்லக் கேட்டிருக்கிறேன். இன்னும் அது பொன்னுலவு சென்னிகுளமாகவே இலங்குகின்றது. ''முருகன் அண்ணுமலைதன் புத்தியில் மகிழ்ந்து நித்தம் நின்றவனும்? எப்படி அண்ணுமலை ரெட்டியார் உள்ளப்பெருமை? இது என்ன தற்பெருமையா? இல்லை; இல்லை; மெய்ப்பெருமையே; அவர் இப்படிப்பட்ட பாடல்களைப் பாடியதிலிருந்தே முருகன் அவர் உள்ளத்தில் என்றும் நீங்கா இடம் கொண்டான் என்பதை நாம் தெளிவாக உணர்கிறோம். முருகன் மகிழ்ந்து புந்தியில் நின்ருலொழிய இத்தகைய பாடல்களை எவரால் பாடஇயலும்? அடுத்து ஓரடியில் கந்தபுராணத்தையே பாடிவிட்டார், முருகன் சூரனை வதைத்ததையும் வள்ளியை மணந்ததையுமே ஓரடியில் பாடி முடித்த திறம் உணர்ந்து மகிழத்தக்கதாம். வாவியின் வளச் சிறப்பினை எங்கும் காண இயலாத ஓர் ஓவியச் சிறப்பாகப் பாடியுள்ளார்.

வண்ணத் தாமரையைக் கண்டு—வாயில்
மதுர ராகம்பாடிக் கொண்டு—மதி

மயங்கிப் பேட்டினுடன் முயங்கியேகிடக்கும்
வண்டு—கள்ளை—யுண்டு

இவ்வடிகள் திரைப்படத்திலும் இசைத்தட்டிலும் இடம் பெற்று அனைவர் நெஞ்சிலும் அமுதம் பாய்ச்சியவையாகும்.

முருகனிடம் காதல்கொண்ட கன்னியொருத்தி அவனைக் கூடிக்களித்தாள். இதனைத் தலைவனைக் கலந்த தலைவி பாங்கிக்குக் கூறியது என்னும் அகப்பொருள் துறையில் அமைத்து எவ்வளவு நயமாகப் பாடியுள்ளார். அதில் தலைவன் பெருமை, தலைவனைக் கலந்த நேரம், குறியிடம், கலந்த பாங்கு இவற்றையெல்லாம் எவ்வளவு இனிமையாக இன்பத்தேன் வந்து காதில் பாய்வது போன்ற இசையில் பாடுகிறார் பாருங்கள்; இல்லை கேளுங்கள்;

எந்த நேரமும் வந்தனை செய்தடி
என்னுறும் அண்ணாமலை தாசன்—துதி
பண்ணும்மெய்ஞ் ஞானவிலாசன்—என்னோ
டிந்தெழுந்து தயங்கு மாலையில்

வந்துவண்டு முழங்கு சோலையில்
இன்பசாகர மாகிய நாடகம்
அன்புடனேசெய்தான் மானே;—அந்தச்
சம்ப்ரமம் என்னசொல் வேனே.

நேரத்தை எப்படிப் பாடினார் கேட்டீர்களா? இந்துஎழுந்து தயங்கும் மாலையாம். இடம் எங்கே? 'வந்து வண்டு முழங்கு சோலையாம்' இப்படிப்பாட முருகன் அருள் பெற்றவர்க்குத்தான் முடியும் என்று நமக்கு மொழியத் தோன்றுகிறது.

இத்தகு கவிதைத்தேனை, அமுதைத் தமிழ் மக்களின் சிந்தையெல்லாம் பாயவிட்ட அண்ணாமலைரெட்டியார் மிக மிக இளம்பருவமான இருபத்தாறும் அகவையில் இவ்வுலகைவிட்டுச் சென்றார் என்பதை எண்ணும்போது நம் இதயம்படும் வேதனைக்கோர் எல்லையில்லை; என்செய்வது? நம் தவக்குறை. பாவலர் பாடிப் பறந்த குயிலானார். குயில் பாடிப்பறந்து மறைந்தாலும் பாடிய பாட்டுக் கேட்டவர் நெஞ்சில் என்றும் நிற்பது போலக் கவிஞர் மறைந்தாலும் அவர் பாடிய தீங்கவிதைகள் என்றும் வாழும்.

கழுகு மலைவளத்தைக்—கதிர் காட்டும் தினைப்புனத்தை
ஒழுகும் அருவியினைக்—கொடி ஊஞ்சல் அழகிகளைப்
பழகும் தமிழ் மொழியில்—அவன் பாடிஇருப்பதுபோல்
அழகு நயத்தோடு—கவி யாரினிப் பாடவல்லார்?

என்று உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் கேட்கிறார். ஆம்; அவர் போல் பாடவல்லார் யார்? என்றுதான் அந்த விந்தைமிகு சிந்தைக்கேட்டு வியந்த நம் சிந்தையும் கேட்கிறது.

தமிழின் தலைமையை நாட்டும் தொகுதிச் சொற்கள்

[ஞா. தேவநேயன்]

2. நெருப்புப் பற்றிய 'சுள்' அடிச் சொற்கள்

உ—உல்—உல, உலத்தல்=எரிதல், காய்தல், உல—உலவை=காய்ந்த மரக்கிளை. "இலை தீந்த வுலவையால்" (கலித். 11).

உல—உலர். உலர்தல்=காய்தல்.

உலர்—உலறு. உலறுதல்=காய்தல், சினத்தல், வற்றுதல்.

உல—உலை=1. நெருப்புள்ள அடுப்பு. 2. கொல்லன் அடுப்பு. 3. சோறு சமைக்கக் கொதிக்க வைக்கும் நீர்.

உல்—அல்—அன்று. அன்றுதல்=எரிதல், சினத்தல், பகைத்தல்.

அல்—அன்—அனல்=நெருப்பு. அனலுதல்=எரிதல்.

அனல்—அனலி=1. நெருப்பு. 2. கதிரவன்.

அனல்—அனலம்=நெருப்பு. அனலம்—வ. அநல.

அனலம்—அனலன்=நெருப்புத் தெய்வம்.

உல்—உள்—ஒள்—ஒண்மை=1. நெருப்பின் தன்மையான விளக்கம். 2. உள்ளொளி, நல்லறிவு. 3. இயற்கையழகு. 4. நன்மை.

ஒள்—ஒளி=1. நெருப்பின் விளக்கம். 2. ஒளிபோல் விளங்கும் புகழ். 3. உள்ளொளி.

ஒளி—ஒளிர். ஒளிர்தல்=விளங்குதல். ஒளிர்—ஒளிறு.

ஒளிறுதல்=விளங்குதல். ஒள்—ஒள்ளிய=ஒளியுள்ள, அறிவு மிக்க, நல்ல, அழகிய.

ஒள்ளியன்=அறிவுடையோன். ஒள்ளியோன்=விளக்கம் மிக்க வெள்ளிக்கோள்.

ஒள்=1. ஒளியுள்ள. 2. அழகிய. ஒள்+தொடி=ஒண்டொடி=விளங்கும் வளையலணிந்த பெண். ஒள்+நுதல்=ஒண்ணுதல்=விளங்கும் நெற்றியுடைய பெண்.

ஒள்+பு=ஒண்பு—ஒட்பு—ஒட்பம்=அறிவு. "கல்லாதானொட்பங் கழியநன் றாயினும்" (குறள். 404).

உள்—அள்—அழ—அழல்=1. நெருப்பு. 2. வெப்பம் 3. எரிவு. 4. நரகம். 5. துளங்கொளி (கேட்டை). 6. செவ்வாய் 7. சினம்.

அழலவன்=1. தீத்தெய்வம். 2. கதிரவன். 3. செவ்வாய்.

அழலுதல்=1. எரிதல், 2. விளங்குதல், 3. காந்துதல், 4. சினத்தல்.

அழல்—அழற்று (பி. வி.), அழற்றுதல்=எரித்தல், வெம்மை செய்தல்.

அழல்—அழறு—அளறு=நரகம்.

"அண்ணாத்தல் செய்யா தளறு" என்னுங் குறளடியில் (255) 'அளறு' என்னும் சொல் ஏட்டுப் பிழையாகவும் இருக்கலாம்.

"பூரியர்கள் ஆழும் அளறு" என்னுங் குறளடி (919) சேற்று வடிவான நரகவகை யென்று கொள்ள இடந்தரினும், நரகம் நெருப்புலக மென்றே பொதுவாகக் கொள்ளப்படுவதனாலும், அழல், எரி முதலிய பெயர்கள் அதற்குண்மையாலும், ஊற்றளவிலேயே நெருப்புத் துன்புறுத்துவதனாலும், அழறு என்னுஞ் சொல்லே அளறு என மருவிற்றென்றோ, ஏட்டுப் பிழையாக நேர்ந்ததென்றோ, கொள்வது பொருத்தமானதே.

அழல்—அழலி=நெருப்பு. அழலித்தல்=எரிச்சல்.

அழல்—அழலை=தொண்டைக் கரகரப்பு.

அழல்—அழன்—அழனம்=1. நெருப்பு, 2. வெம்மை.

"அழனம்மை நீக்குவிக்கும்" என்னும் தேவார (1225 : 4) அடியிலுள்ள "அழனம்மை" என்னுந் தொடரை, அழன்+நம்மை என்றும் பிரிக்கலாம்.

அழன்—அழனி ஒ. நோ : அழல்—அழலி, களன்—கழனி.

அழ—அக—அகை. அகைதல்=எரிதல். "அகையெரியானாது" (கலித், 139 : 26). ஒ. நோ : மழ—மக.

அழனி—அகனி—வ. அக்நி (agni)—*L.* ignis. இதற்கு யாசுகர் (Yaskar) தம் நிருத்தத்திற் (Nirukta) கூறியிருக்கும் வேர்ப் பொருட் காரணங்கள் முற்றும் பொருந்தாப் பொய்த்தல் என்பதை அங்கு நோக்கிக் காண்க. புதுச்சேரி அரவிந்தர் தவநிலைய இருக்கு வேதப் பதிப்பு அகோ (ago) என்று மூலங் காட்டுவதும், முற்றும் தவரும். இது சமற்கிருதத்தில் அஜ் என்றே நிற்கும்.

உள்- உண்—உண்ணம்=வெப்பம். "உண்ண வண்ணத் தொளிநஞ்ச முண்டு" (தேவா. 510 : 6).

உண்ணம்—வ. உஷ்ண. மராத். ஊன்.

உண்—உண உணத்தல்=காய்தல். மிளகாய் உணந்து விட்டது (உ.வ.). உணந்த மிளகாய் (உ வ)=மிளகாய் வற்றல்.

உண. உணத்து (பி.வி.), உணத்துதல்=1. காயப்போடுதல், நெல்லை உணத்தினர். (உ.வ.) 2. உடம்பை மெலிவித்தல் அல்லது வற்றவைத்தல். "மெய்யுணத்தலும்" (தைலவ. தைலி. 110),

உண—உணங்கு. உணங்குதல்=நெல் முதலியன காய்தல் "உணங்குணக் கவரும்" (பட்டினப். 22). "தினைவிளைத்தார் முற்றந் தினை யுணங்கும்" (தமிழ்நா. 154.) 2. மெலிதல். "ஊட லுணங்க விடுவாரோடு" (குறள். 1310). 3. வாடுதல். "உணங்கிய சிந்தையீர்" (கந்தபு மோன. 21). 4 சுருங்குதல். "உணங்கரும் புகழ்" (காஞ்சிப்பு நாட்டுப். 1)

உணங்கு—உணங்கல்=1. உலர்த்திய கூலம். "உணங்கல் கெடக் கழுதை யுதடாட்டங்கண்டென் பயன்" (திவ், திருவாய்) 4 : 6 : 7). 2. வற்றல். "வெள்ளென் புணங்கலும்" (மனி. 16:67. 3. உலர்ந்த பூ. (பிங்,)

உணங்கு—உணக்கு (பி. வி.) உணக்குதல்=உலர்த்துதல். "தொடிப்புழுதி கஃசா வுணக்கின்" (குறள். 1037)

உணக்கு—உணக்கம்=வாட்டம். ம. உணக்கம், க. ஒணகிலு (ே), து ஒணகெலு.

உணக்கு=வாட்டம். "உணக்கிலாத தோர் வித்து" (திருவாச. 30 : 1)

உல்—உர்—உரு. உருத்தல்=1. அழலுதல். 'ஆக முருப்ப நூறி "(புறநா. 25 :10). 2. பெருஞ்சினங் கொள்ளுதல். "ஒரு பகலெல்லா முருத்தெழுந்து" (கலித் 39 : 23)

உரு—உருத்திரம்=பெருஞ்சினம். உருத்திரம்—வ. ருத்ர (d) 'திரம்' ஒரு தொழிற்பண்பீறு. ஒ. நோ: மாத்தல்=அளத்தல். மா+திரம்=மாத்திரம் (அளவு). அவன் எனக்கு எம்மாத்திரம்? என்னும் வழக்கை நோக்குக. மானம் (மா + அனம்) என்னும் அளவுப் பொதுப்பெயரையும், மா, அரைமா, (ஒருமா), இருமா, மாகாணி முதலிய அளவுச் சிறப்புப் பெயர்களையும், மேலை வ. ஆ. மாவட்டத்தில் படி என்னும் முகத்தலளவைப் பெயர் மானம் என்று வழங்குதலையும் நோக்குக. மாத்தல் என்னும் வினைச்சொல் பண்டே வழக்கிறந்தது. திரம்—திரை. மா+திரை=மாத் திரை= அளவு, எழுத்தொலிக்குங் கால அளவு, உண்ணும் மருந்தளவு,

சினம் தீயொத்தலால், தீ பற்றிய சொற்களெல்லாம் சினத்தையுங் குறிக்கும்.

உருத்திரம்—வ. ரௌத்ர (raudra) = வெகுளி.

ஒ. நோ: *E wrath*, n. anger *O. E. wrreththu*, *AS* and *ONU. wraedo*, *ME. wrathe*

E. wroth, adj. angry. *OE wrath*, *OS. wreth*, *OHG—reid*, *ON reithr*

கீற்றும் (Skeat) கிளேனும் (Klein) இச் சொற்களை reid (twristed) என்னும் மூலத்தினின்று திரிக்கின்றனர். அது தென் சொல்லை அறியாமையாலும் இருக்கலாம்.

உரு—உரும்—உருமம்=1. வெப்பம். 2. வெப்பம்மிக்க நண்பகல்.

உரும்—உருமி. உருமித்தல்=வெப்பமாதல், புழுங்குதல். உரும்—உரும்பு=1. கொதிப்பு. 2. வெகுளி. "உரும்பில் கூற்றத் தன்னநின்" (பதிற்றுப். 26 : 13)

உரும்பு—உருப்பு=1. வெப்பம். "கனமிசை யுருப்பிறக் கனைதுளி சிதறென" (கலித். 16 : 7) 2. சினத்தீ. "உருப்பற நிரப்பினை யாதலின்" (பதிற்றுப். 50 : 16). 3. கொடுமை. "உருப்பில் சுற்றமோடு" (பெரும்பாண். 447).

உருப்பு—உருப்பம்=1. வெப்பம். "கனலும்.........உருப்ப மெழ" (அரிச். பு. விவா. 104) 2. சினம்.

உரு—உருகு. உருகுதல்=1. வெப்பத்தால் இளகுதல், 2. மனம் நெகிழ்தல்.

உருகு—உருக்கம்= 1. இளக்கம். 2. மனநெகிழ்ச்சி. இரக்கம்.

உருகு—உருக்கு (பி.வி.). உருக்கு=உருக்கிய இரும்பு, உருக்குதல்= 1. இளக்குதல் 2. வாட்டுதல், மெலிவித்தல். உருக்கு—உருக்கன்=உடம்பை வாட்டும் நோய்.

உருக்கு—உருக்கி=1. மாழைவகைகளை உருக்குபவன்.

2. உடம்பை உருக்கும் நோய். உருக்காங்கல்=உருகிப் போன செங்கல். உல்—சுல்—சுல்லி= 1. அடுப்பு. (திவா.) 2. மடைப்பள்ளி. (இலக். அக.) சுல்லி—வ. சுல்லீ (c).

சுல்—சுள். சுள்ளெனல் = வெயில் காய்தற் குறிப்பு, உறைத்தற் குறிப்பு. சுள் =கருவாடு (காய்ந்தமீன்). "சுள்ளினைக் கறித்தனர்" (கந்தபு. அசமுகிநகர். 18)

சுள்—சுள்ளம்=சினம் (W.).

சுள்ளம்—சுள்ளகம் = சுள்ளக்கம் = 1. சினம். (யாழ். அக) 2. வேர்க்குரு. (சங். அக.) சுள்ளக்கம் வ. க்ஷுல்லக.

சுள்ளக்காய்=மிளகாய். உறைப்புச்சுவை சுடுதல் போன்றிருத்தலின், சுடுதற்கருத்தினின்று உறைப்புக் கருத்துத் தோன்றும்.

ஒ. நோ : *E.* hot=of high temperature, pungent.

சுள்—சுள்ளி=காய்ந்த குச்சு. சுள்—சுள்ளை=செங்கல் சுடுமிடம். சுள்ளை—சூளை.

சுள்—சுளுந்து=தீவட்டி, பந்தம் எரிக்கும் மரக்கழி.

சுள்—சுள்கு—சுட்கு—சுட்குதல்=காய்தல், வற்றுதல். (W)

ஒ. நோ : வெள்கு—வெட்கு—வெட்கம்.

சுட்கு—சுட்கம்= 1. வறட்சி 2. வறண்டது. 3. உடம்பை வாட்டும் ஒரு நோய். 4. பணம் முதலிய பொருட்குறைவு. 5. கஞ்சத்தனம். சுட்கஞ் செய்யாதே. (உ. வ.)

சுட்க தருக்கம்=வீண்சொற்போர்.

சுட்கு—சுக்கு. சுக்குதல்=உலர்தல். (நாஞ்).

சுக்கு=காய்ந்த இஞ்சி. சுள்—வ. சுஷ் (to dry). ஒ. நோ; உள்(ஒள்)—வ. உஷ் (to burn)—உஷா=ஒளி தோன்றும் விடியற்காலம்.

சுக்கு—வ. சுஷ்க. சுக்கு—சுக்கான்= 1. சுண்ணாம்புக்கல் 2, உருக்குச் செங்கல்.

சுக்கு = காய்ந்தது, வறண்டது, பயனற்றது. சுட்கம்—சுக்கம் = 1. வறட்சி, 2. கஞ்சத்தனம். சுக்கஞ்செட்டி—கடுஞ்செட்டுள்ளவன்.

சுள்—சுள்பு—சுட்பு—சுப்பு—சுப்பி = சுள்ளி. சுள்ளிசுப்பி என்பது மரபிணைச்சொல்.

சுப்பெனல் = ஈரமுள்ளது காய்தல் அல்லது வறண்டநிலம் நீரை உள்ளிழுத்தற் குறிப்பு.

சுள்—சுண்—சுண்ணம் = 1. காளவாயிற் சுட்ட கல். 2. அக்கல்லை நீற்றின நீறு. 3. நீறு. 4. நறும்பொடி. 5. பூந்தாது.

சுண்ணம்—சுண்ணம்பு—சுண்ணும்பு = 1·சுட்ட சுண்ணும்புக் கல். 2. நீற்றின சுண்ணும்பு.

சுண்ணக்கல் = சுக்கான்கல். (யாழ். அக) சுண்ணம்—சுண்ணகம். விழாநாட்களில் மக்கள் மேல்தூவும் நறும்பொடி.

சுள்—சுண்டு. சுண்டுதல் = (செ. கு. வி.) 1. நீர் வற்றுதல் 2. வாடுதல், சுருங்குதல், அச் செய்திகேட்டவுடன் அவன் முகஞ் சுண்டிப் போயிற்று. (உ. வ.)—(செ. குன்ருவி) நீர் வற்றக் காய்ச்சுதல் அல்லது அவித்தல். இன்றைக்குக் கடலை சுண்டினுர்கள். (உ. வ.)

சுண்டு—சுண்டல் = 1. நீர் முற்றும் வற்ற அவித்த கடலைப் பயறு. 2. சுண்டற்கறி.

சுண்டு—சுண்டான் = சிறு பிள்ளைகள் விளையாட்டாகக் கொளுத்தும் கொள்ளிக்குச்சு.

சுண்டு—சுண்டி = 1. சுக்கு (காய்ந்த இஞ்சி) 2. தொட்டாற் சுருங்கி, தொட்டாற் சிணுங்கி, தொட்டால்வாடி என்னும் பூண்டு.

சுண்டி (சுக்கு) – வ. சுண்டி (th) இதுவடமொழியிற் 'சுண்ட்டி' என வலித்தொலிக்கும்.

சுண்டி—சுண்டில் = தொட்டாற்சுருங்கி. வாடினது சுருங்கும்

சுள்—சுடு—சுடுவல் = வெதும்பும் அரத்தம். (திவா.)

சுடுவல்—சுடுவன் = வெதும்பும் அரத்தம். (பிங்.)

சுடுவான் = மரக்கலச் சமையலறை.

சுடு—சுடல்—சுடலை = சுடுகாடு.

சுடு—சுடர்—சுடரோன் (சுடரவன்) = கதிரவன்.

சுடு—சூடு.

சுல்—சுர்—சுரீர் எனல் = 1. நெருப்புச்சுடும் குறிப்பு. 2. தழலிற்படும் நீர் சுண்டும் குறிப்பு.

சுர்—சுரம் = 1. காய்ச்சல் 2. சுடும் பாலைநிலம். "சுரமென மொழியினும்" (தொல். பொருள். 216)

சுரம் (காய்ச்சல்)—வ. ஜ்வர.

சுர்—சூர் = 1. நெருப்பு. 2 கதிரவன். "சூர்புக வரியது...... ......தொன்மதில்" (கம்பரா. கவந்த. 21).

சூர்—சூரன் = 1. நெருப்பு. (பிங்.) 2. கதிரவன். (பிங்) "காதற் சூரனை யனைய சூரா" (பாரத. பதினேழாம். 49). சூரன்—வ. ஸூர (sūra), ஸூர்ய (sūrya) சூர் என்னும் சொல்லிற்கு, அச்சம், கொடுமை, உறைப்பு, மிளகு முதலிய பொருள்களிருப்பதும், அதைத் தென்சொல்லெனத் தெரிவிக்கும்.

சுள் (சுல்—சொல்)—*L.* *sol*, sun, *Icelsol*, *OE.*, *ON*, *sol* *Dan.*, *Swed.* *sol*, *E. sol*, *Goth.* *soule*, *Lith.* *soule*, *Lett*. *soule*, *Ir.* *sūl*, *Russ*, *solntse*, *W.* *haul* (for *saul*), *Co. heuul*, *hau*, *Bret*, *heol*, sun.

girasol, parasol, rosolio, turnsole என்னும் கூட்டுச் சொற்களின் இரண்டாம் உறுப்புக்கள், கதிரவனைக் குறிப்பனவே.

solar என்பது sol என்பதன் குறிப்புப் பெயரெச்ச (adj) வடிவம்.

சகர (ஸகர) முதல் ஹகர முதலாகத் திரிதல் இயல்பே. சிந்து—பார. ஹிந்து, *L.* sex (*E.* six)—*Gk.* hex.

(சுல்--சுன். சொன்—சன்). *E.* sun, *ME.* sonne, *OE.* sunne, *ON.*, *OS.*, *OHG.* sunna, *MDU.* sonne, *Du.* zon *MHG.*, *G.* sonne, *Goth.* sunna = sun.

இவற்றிற் கெல்லாம் ஸூ (sū) ஸௌ (sau) என்பன உய்த்துணர்வு மூலமாகக் காட்டப்படுகின்றன. மேலையாரியர் தமிழின் தொன்மை முன்மை தென்மைத் தன்மைகளை அறியாமையால் இங்ஙனங் கூறுகின்றனர். அல்லது கொள்கின்றனர். இவற்றிற் கெல்லாம் சுல் என்னும் தென்சொல்லே அடிமூலம்.

சுல்—சொல் = நெருப்புப் போல் அல்லது பொன் போல் விளங்கித் தோன்றும் நெல்.

"சடைச் செந்நெல் பொன்விளைக்குந் தன்னாடு" என்று நளவெண்பா (சுயம்வர. 68) கூறுதலையும், பொன் விளைந்த களத்தூர் என்னும் வழக்கையும் நோக்குக. நெல் என்னும் பெயரும் இப் பொருட் காரணங் கொண்டதே. நில்—நில—நிலா—நிலவு. நிலத்தல் = ஒளிர்தல், விளங்குதல். நில்—நெல்.

சொல்—சொலி—சொலித்தல் = 1. எரிதல். "நாப்பண் அழல் சொலிப்பதாக வுன்னி" (பிரபோத. 44 : 15,). 2. ஒளிர்தல். "மான மென் றுரைப்ப தெழுந்துமேற் சொலித்து வருவது போன்றும்" (ஷை 11 : 1).

சொலி—ஜொலி—வ. ஜ்வலி என்று திரிந்துள்ளது. ஜ்வல் என்பதை மூலமாகக் காட்டுவர் வடமொழியாளர். இது செயற்கை மூலம்.

சொலித்தல் வினைச்சொல். ஆளப்பட்ட முன்னூல்கள் வழக்கிறந்தமையால், பின்னூலினின்று மேற்கோள் காட்டப்பட்டது.

சொல்—சொன்—சொன்னம் = விளங்கும் நிறப்பொன். (திவா.) "சொன்னதானப் பயனெனச் சொல்லுவர்". (கம்பரா.சிறப்பு.).

சொன்னம்—வ. ஸுவர்ண = நன்னிறமுள்ளது, தங்கம். இது பொருந்தப் பொய்த்தலான சொற்றிரிப்பு.

இனி, சூர் என்பதையே cūr என்று திரித்து, சூர்ண (cūrna) என்னுஞ் சொல்லைத் தோற்றுவித்துள்ளனர்.

சூர் (cūr) = எரி (to burn) சூர்ண—த. சூரணம் = நீறு, பொடி. சூரணம்—சூரணி. சூரணித்தல் = நீற்றுதல், பொடி செய்தல். ஒ. நோ.: சுள்—சுள்ளம்—சுண்ணம். சுள்ளல் = எரிதல் (வழக்கிறந்த வினைச்சொல்).

இனி, சுள் என்னும் அடிபோன்றே, குள், துள், நுள், புள். முள், என்னும் வழியடிகளும் உள் என்னும் மூல அடியினின்று திரிந்து, நெருப்புப் பற்றிய பல்வேறு சொற்களைப் பிறப்பிக்கும். அவையெல்லாம் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல், அகரமுதலியில் மேலையரும் ஒப்புமாறு ஐயந்திரிபற விளக்கப்படும். 'முதற்றாய் மொழி'யையும் பார்க்க.

காத்தற் கடவுள்

[தி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்., விஷாரத்,

இணைப்பதிவாளர், தனி அதிகாரி, திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கி (வரையறை) திருநெல்வேலி.]

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் குலோத்துங்க சோழன் உலாவிலே பேதையைப் பற்றி, "இலங்கிழையார் மால்கரும், அவ் வகை காரள்" என்று கூறுகிறார். அதாவது குலோத்துங்க சோழனைக் கண்ட மங்கையர் காம மயக்கமுற, பேதை அவ்வாறு மயக்கம் இல்லாமல் இருந்தாள் என்பதாம். மால் என்றால் மயக்கம். இந்த இடத்தில் காம மயக்கம் அதாவது சிற்றின்ப மயக்கம் என்பதாகிறது. எனவே பேரின்ப மயக்கத்தை அளிக்க வல்லானை, தெய்வத் தன்மையுடையானை 'திருமால்' என அழைப்பது சாலப் பொருத்தமல்லவா ; பேரின்ப மயக்கம் காரணமாகவே "கண்டவர் தம் மனம் வழங்கும் கண்ணபுரத்து அம்மான்" என மங்கை மன்னனும் "கண்டவர் தம் மனம் வழங்கும் கணபுரத்து என் கருமணி" என சேர மன்னன் குலசேகரப் பெருமாளும் பரவுகிறார்கள். "முன்னம் குறளுருவாய் மூவடி மண் கொண்டு வந்த, மன்னன் சரிதைக்கே மாலாகி" என்று தமது பேரின்ப மயக்கத்தை மங்கை மன்னன் குறிப்பிடுகிறார்.

அண்டவாணன் அரங்கனை ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்யும் போதும் சரி, புலவர் பெருமக்கள் குறிப்பிடும்போதும் சரி, கடலுடனோ மேகத்துடனோ ஒப்பிடுவது மரபு. "கடல் நிறக்கடவுள்" என, தொண்டரடிப் பொடி ஆழ்வாரும், "கொண்டல் வண்ணன்" என திருப்பாணாழ்வாரும் கூறி மகிழ்கின்றனர். ஆழ்வார்களில் சிறந்தவராகிய நம்மாழ்வாரோ "செக்கர் மாமுகில் உடுத்து" என்றும், "கரிய முகில் வண்ணம், எம்மான், கடல் வண்ணம்" என்றும், "நீலக்கருநிற மேக நியாயற்கு" என்றும் பரவசப் படுகிறார். மங்கை மன்னனோ "கருமுகில் போல்வது ஒரு மேனி", என்றும் "கார் வண்ணத் திருமேனி" என்றும் புகழ்ந்துரைக்கிறார். பெரியாழ்வாரோ, "காயமலர் நிறவா" கருமுகில் போலுருவா; என்று அழைப்பதோடு நில்லாது. "திரண்டு எழுதழை மழை முகில் வண்ணன்" என்று வியக்கிறார். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோ அடிகள் "நீலமேனி நெடியோன்" என்றும் "கடல் வண்ணன்" என்றும் "கரியவன்" என்றும் போற்றுகிறார்.

இவ்வாறு அஞ்சன வண்ணனைப் பொதுவாக கருமுகிலுடன் ஒப்பிட்டு நீலமேனியுடையவன் எனப்படுவதின் காரணம் என்னை ! இந்து சமயத்தில் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் அயன், அரி, அரன் நிரையே செயல்

படுத்துவதாக நம்பப்படுகிறது. மன்று பெரும்புகழ் மாதவன் காத்தற் கடவுளாகக் கொள்ளப்படுகிறார். இதனாலன்றோ நம்மாழ்வார் "திருவுடை மன்னரைக் காணில், திருமாலைக் கண்டேன்" என்கிறார். கைமாறு கருதா கடப்பாடுடைய மழை யின்றேல், உழவர்கள் உழவுத் தொழிலை மேற்கொள்ளார். உலகிலே பசிப்பிணி உள்நின்று வாட்டும். தானம், தவம் இவை தங்கா. வானோர்க்கும் பூசனை கிடையா. எனவேதான் வள்ளுவப் பெருந்தகையும் கடவுளை வாழ்த்தியபின், வான்சிறப்பை விதந்து உரைக்கிறார். இளங்கோவடிகளும் திங்களையும், ஞாயிறையும் போற்றியபின் "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என மழையை வாழ்த்துகிறார். உலகத்திற்கு உயிர் நாடியாம் அமுதம் எனப்பாராட்டப்பெறும் மழையை வழங்கும் சூல்கொண்ட மேகம் நீலநிறம் உடையதே. காத்தற் கடவுளான சக்கரம் உடையானை கருமுகிலோடு ஒப்பிட்டதில் வியப்பு ஏதும் இல்லை.

காத்தல் தொழிலை உடைய ஆலிலை வைகிய மாயவன் வளம் மிக்கவனாக இருக்கவேண்டாமா! அதனால்தான் அவனை பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. "பாற்கடலுள் பையத் துயின்ற பரமன்" என்பது சூடிக்கொடுத்த நாச்சியார் திருவாக்கு. "ஒண்பவள வேலை யுலவுதண் பாற்கடலுள், கண்துயிலும் மாயோன்" என்பர் குலசேகரப் பெருமாள். பால் வளப்பத்தைக் குறிப்பது. ஒரு நாட்டின் செல்வச் செழிப்பைக் குறிக்க, பாலும் தேனும் ஆறாக ஓடியது எனச் சொல்வது அக்கால மரபு. "சீர்த்த முலை பற்றி வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள் நீங்காத செல்வம்" என்பதிலிருந்தே செல்வத்திற்கும் பாலுக்கும் உள்ள தொடர்பு தெரிகிறது. மேலும் குழந்தையின் வளர்ச்சிக்கு மிகவும் வேண்டப்படுவது தாய்ப்பால். ஆரோக்கியமாக வாழ்வதற்கும் தள்ளாத வயோதிக காலத்திற்கும் பால் தேவைப்படுகிறது. பால் வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. ஞானப்பால் அருந்தியமையால்தான் ஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்களைப் பாடியருளினார். எனவே பாலாகிய கடலிலே துயில் கொள்பவனாக மதுசூதனனைப் போற்றுவது முற்றிலும் பொருத்தமே.

கனலாடு கண்ணாற் காமனைக் காய்ந்தவனை அபிடேகப் பிரியன் என்றும், பாற்கடலுள் பள்ளி கொள்கின்ற பரமமூர்த்தியை அலங்காரப்பிரியன் என்றும் கூறுவது உலக வழக்கு. செல்வன் தன்னைப் பலவகையால் அலங்கரித்துக் கொள்வான் அல்லவா? திருமகளுக்கே நாயகனாக உள்ளவன் அலங்காரப்பிரியனாக உள்ளத்தில் வியப்பு என்ன? இதுவும் இவன் மேமற்கொண்ட தொழிலுக்குப் பொருத்தமாக உள்ளது.

"உரந்தரு மெல்லணைப் பள்ளிகொண்டான்" என்றும் "பணங்களாயிரமுடைய நல்லரவணைப் பள்ளிகொள்பரமன்" என்றும், அரவணைமேல் துயில் கொள்பவனுகக் கார்மேனி யுடையான் கருதப்படுகிருன். இவனது ஊர்தியோ பெரிய திருவடி எனப்படும் கருடாழ்வார். "தூவாயபுள்ளூர்ந்து" என்பது மங்கை மன்னன் திருவாக்கு. பாம்பிற்கும் கருடனுக்கும் உள்ள பகை யாவரும் அறிந்ததே. இதை,

"கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால்எயிற்று
அழலென உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப் புள்"

எனச் சொல்லோவியமாக நக்கீரனுர் தீட்டியுள்ளது குறிப்பிடத் தக்கது. இவ்வாறு நீங்காப்பகை கொண்ட பாம்பினைப் பாயலாகவும், கருடனைத் தன் வாகனமாகவும் கொண்டுள்ளது அவனது நீதியின் நேர்மையையே எடுத்துக்காட்டுகிறது. சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்து நீதி செலுத்தியமை யாலேயே சோழ மன்னன் மாந்தாதா ஆட்சியில்

"பைந்தடத்து ஆடுதுறையில் ஆடுபுலியும் புல்வாயும்"

ஒருங்கே நீருண்டதாகக் கூறப்படுகிறது. காத்தல்தொழிலை மேற்கொண்டோருக்கு நீதியின் நேர்மை மிகவும் வேண்டற் பாலது என்று இந் நாளையிலும் நீதித்துறையில் எந்தக் குறுக் கீடும் இல்லாது இருப்பதே ஆட்சியின் நேர்மைக்குச் சான்ருகக் கருதப்படுகிறதல்லவா !

"கோலார்ந்த நெடுஞ்சார்ங்கம் கனற்சங்கம்
கொலையாழி கொடுந் தண்டு கொற்றவொள் வாள் !"

ஆகிய இவை ஐந்தும் திருமாலின் படைக் கலங்களாகக் கூறப்படுகின்றன. இவற்றுள்ளும் ஆழியும் சங்குமே சிறப்பிக்கப் பெறுகின்றன. "சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையான்" என்பது ஆண்டாள் திருவாக்கு, திருப்பல்லாண்டு இசைக்கப் போந்த பெரியாழ்வாரும்,

"வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்குமுழங்கும் அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே"

என்று பரவுகிருர். "வெள்ளை சுரி சங்கோடு ஆழி ஏந்தி என்பது நம்மாழ்வார் திருவாக்கு. மங்கை மன்னனே, "நெய்யாராழியும் சங்கமும் ஏந்தும் நீண்ட தோளுடையாய்" என்று அழைக்கிருர். திருவேங்கடத்தானின் நின்ற வண்ணத்தை இயம்பும்போது, "பகையணங்கு ஆழியும், பால்வெண் சங்கமும்" என்று சிலப்பதி காரம் குறிப்பிடுகிறது. காத்தற் கடவுள் ஆதலின் காக்கவேண்டிய உலகத்தின் வட்டவடிவினைக் கொண்ட ஆழி படைக்கலமாக்கப் பட்டது. "புள்ளரையன் கோயிலில் வெள்ளைவிளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ" என்பதினின்றும் சங்கொலி மங்கள ஒலி

என்பது புலனாகிறது. மன்னர்கள் உலாவரும்போது சங்கொலி செய்வது மரபு. உலகிற்கு மங்களத்தைப் புரிபவன் என்பதைக் காட்டவே சங்கை ஒரு கரத்தில் ஏந்தியுள்ளதாகக் கருதவேண்டியுள்ளது. 'துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனம்' என்பர் வடநூலார். அதற்கேற்ப அன்பர்களைக் காக்கும் பணியில் ஊறு செய்வோரைத் தண்டிக்க ஆழி வேண்டியுள்ளது. போரிலே சங்கு முழங்குவது மரபு. தான் மேற்கொண்ட தொழிலுக்கு ஏற்பவே பாற்கடலில் பள்ளிகொண்டான் படைக்கலங்களைப் படைத்துள்ளான்.

பறவையேறும் பரமபுருஷன் பொதுவாகத் திருமடந்தை, மண் மடந்தை இருபாலும் திகழ சேவை சாதிப்பதை ஆலயங்களில் காணலாம். "மண்மகள் கேள்வன், மலர் மங்கை நாயகன்" என்பர் மங்கை மன்னன். செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொன் திருவடியினை வருடுவதாகவும் இவர் போற்றுகிறார். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது பொய்யாமொழிப் புலவர் வாக்கு. எனவே தன்னை வணங்கியவர் வேண்டிய செல்வச் சிறப்பைப் பெறலாம் என்னுமாப்போல் திருமகளை திருவுக்கும் திருவாகிய செல்வன் தன்னிடத்தே கொண்டுள்ளான். நிலம் செல்வ வளர்ச்சிக்கு ஒரு கருவியாகக் கொள்ளப்படுவதால் நில மங்கையை மற்றொரு பாகத்து வைத்துள்ளான். தன்னடியை அடைந்தோருக்கு இம்மையில் சகல நலங்களையும் நல்குவான் எனப்படுகிறது. பேரின்ப வீட்டை அடைய மனிதன் பெண்ணாசை பொன்னாசை, மண்ணாசை ஆகிய மூவாசைகளையும் துறக்க வேண்டும் என்று கூறுவர். திருமகளும் நிலமடந்தையும் பெண்கள் எனவே பெண்ணாசையைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். பொன்னாசையை செய்யாளாகவும் மண்ணாசையை புவி மடந்தையாகவும் உருவகப்படுத்தியுள்ளதாகக் கருதலாம். மாயோன் மலர் மகளையும், மண்மகளையும் தன்னிடத்தே வைத்தது போன்று, மூவாசைகளையும் தம் மனத்தே அடக்கியவர்களே பேரின்ப வீட்டை அடையலாம். நிலத்தையும் ஒருவகையான செல்வமாகக் கொண்டால், செய்யாள் உறைதரு மார்பன் எனப் படுவதால், மூவாசைகளையும் அடக்க வேண்டும் என்று பொருள் கூறலாம். ஆகவே தன்னிடம் தன்னை அர்ப்பணித்தோருக்கு மறுமையில் வீட்டின்பம் அளிப்பான் எனப்படுகிறது. எங்ஙனமாயினும் இம்மையிலும் மறுமையிலும் தன் அடியார்க்கு இன்பம் வழங்குவான் எனக்கொள்ளலாம்.

இங்ஙனம் திருமேனி, பள்ளிகொண்ட இடம், பாயல், ஊர்தி, படைக்கலங்கள், துணைவியர் இன்னோரன்ன பிறவும் மல்லாண்ட திண்தோள் மணிவண்ணன் மேற்கொண்ட காத்தல் தொழிலுக்கு ஏற்ப அமைந்துள்ளமை உய்த்து உணர்ந்து இன்புறற்பாலதாம்.

———

தமிழ் இசைத்துறை வளர...

[பேராசிரியர் வீ. ப. கா. சுந்தரம்

இறையியல் கல்லூரி, மதுரை.]

(முன் இதழ் ௫0௩-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பி. சாம்பமூர்த்தியாரின் நூல்கள் :

இந்த நூற்றாண்டில், இசைநூல்களைத் தொடர்ந்து வெளியிட்டவருள் முதல் இடம், இசைப் பேரறிஞர் பி. சாம்பமூர்த்தியார்க்கே உரியது. இவர் தொடாத இசைத்துறையே இல்லை எனலாம். தமிழகம் இவரை என்றும் வாழ்த்தக் கடமைப் பட்டுள்ளது. ஆனால் இவருடைய நூல்களில் கூறியதையே மீண்டும் மீண்டும் கூறுதல் என்பதைப் பல இடங்களில் காணலாம். ஒரு பாகுபாட்டு நெறிமுறையில் பெரும்பாலான நூல்களை இவர் எழுதவில்லை. இவருடைய நூல்களிலும் வடமொழிச் செய்திகளும் வடசொற்களும் மிக அதிகம் உண்டு. இவர் தமிழ் இலக்கியக் கடல் மூழ்கி இசைச் செய்திகளை எடுத்துத் தொகுத்துத் தரும் பணியில் இறுதிவரை ஈடுபடவில்லை. இவர், தமிழிசைக்குச் சமற்கிருத நூல்களையே அடிப்படையாகக் கொண்டவர் என்பது உண்மை.

இசை வரலாறு :

தமிழிசையின் தோற்றம், தொன்மை, வளர்ச்சி, மலர்ச்சி, ஆழமுடைமை முதலிய அடங்கிய நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளிவருதல் வேண்டும். இதனை விரைவாகச் செய்தல் வேண்டும்; வெளியுலகில் எல்லாம் தமிழிசை மாட்சிமையைப் பரப்புதல் வேண்டும். இசையின் வரலாற்றுக் காலத்தை இவ்வாறு பிரிக்கலாம். (i) தொல்காப்பியத்திற்கு முந்திய காலம், (ii) சங்க காலம், (iii) சிலப்பதிகாரக் காலம், (iv) தேவாரக் காலம், (v) இடைக்காலம், (vi) தற்காலம், எனப்பகுத்து, வகை வகையான இசை வரலாற்று நூல்கள் வெளியிடுதல் இன்றியமையாதது. இதற்குத் தனி ஆராய்ச்சித்துறை நிறுவுதல் வேண்டும். அரசு திட்டமிடல் வேண்டும். இன்றேல் கழகமே இப்பணியைச் செய்யலாம்.

பண்ணாராய்ச்சி மட்டும் போதாது :

சென்னைத் தமிழிசைச் சங்கம் 1949 ஆம் ஆண்டு முதல் பண்ணாராய்ச்சியில் ஈடுபட்டுவருவது பெரிதும் பாராட்டற்குரியது. இவ்வாறு கூடி ஆய்ந்து முடிவுகாணும் முறை தமிழிசை வரலாற்றிற் புதியது; போற்றற்குரியது. ஆயினும் தமிழிசைச் சங்கம்—பண்கள் என்னும் ஒரு துறையை மட்டும் நெடுகப் பல்லாண்டு ஆராய்ந்து வருகிறது. இப்பணியோடு, இந்தக் கூட்டம் சற்று சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து, ஆண்டுமுழுமையும் ஆங்காங்கு இசையின் பல்வேறு துறைகளையும் வரிசையாக ஆய்ந்து வெளியிட்டால்—பெரும்பயனும் பண்பும் பயக்கும்; பண்ணாய்வுக் குழு—நற்றமிழறிஞர்குழு. இசைத்துறைகள் ஒவ்வொன்றையும் வரிசையாக வளமாக ஆராயலாம். ஒலிஅலகுஇயல் (சுருதியியல்), கோவையியல் (சுரஇயல்), ஒத்துஇயல் (பாட்டுச்சுருதியியல்), பெரும் பண்ணியல் (தலைமை இராக இயல்), கிளைப்பண்ணியல், ஒத்திகையியல் (இணை, கிளை நட்புச்சுரங்களினியல்), இசைக் கருவி வரலாறு, யாழியல், குழலியல், கிண்ணரவியல், குழலியல், தாளவியல், கொட்டுமுழக்குக் காலக் கணக்கியல், கீர்த்தனை வரலாறு, கீர்த்தனை அமைப்பியல் முதலிய வரிசைகளில், அறிஞர்கள் கூடிக் கலந்து ஆய்ந்து அறிவு அளிக்கலாம். அரசர் முத்தையா செட்டியார் அவர்கள், சிதம்பரம், சென்னை, மதுரை எனும் மும்பெரும் நகர்களில் உள்ள இசைக் கல்லூரிகளை ஆய்வுத் துறையில் இணைக்கும் நடுவண் அமைப்பு இசை ஒன்றையும் மலரச் செய்யலாம். அவரே நற்பணிகள் செய்ய வல்லவர்; செய்யும் நல்லவர்.

தமிழிசையியல் பேரகராதி :

"The Oxford Companion to Music" என்னும் பேரகராதி ஐரோப்பிய இசைக் கலைக் களஞ்சியம்; மேலை நாடுகளின் இசைச் செய்திகள் அனைத்தையும் அங்கே கண்டுகளிக்கலாம். இது போன்று, இசைக்கலைக் களஞ்சியத்தைத் தமிழ் இசைக்கு உருவாக்குதல் வேண்டும்; இதற்குத் தமிழக அரசு, திட்டம் வகுக்க முன்வருதல் வேண்டும். இதற்குச் செய்யும் செலவு, ஊதியமேதரும் உரிய ஆண்டுகளிலே. இழப்பு நேரிடாது.

தமிழிசைத்துறைச் சொல்கள் :

அறிவியல், பயிரியல், நிலவியல், அரசியல், இறையியல், மெய்யியல் முதலிய பலதுறைகட்கும் தனித்தமிழ்த் துறைச்சொல்

அகராதிகளைத் தமிழக அரசு வெளியிட்டுள்ளது. ஆனால், இசையியல் துறைச் சொல்களைத் தமிழ் மொழியில் அமைத்தல் பற்றிய எண்ணமே இல்லை. இன்று தமிழக இசைக் கல்லூரிகளில் உள்ளவர்களுள் சிலர் தமிழ் மொழிப் பகைவர்கள்; சிலர் தமிழ் மொழி வெறுப்பாளர்கள்: சிலர் தமிழ் வளமற்றமொழி என்று ஏசுபவர்கள். இவர்கள் சாடவ, ஔடவம் என்று சாடுவார்கள்; ஜனக ஜன்ய மென்று மன மகிழ்வார்கள்; திஸ்ரம், சதுஸ்ரம், மிஸ்ரம் என்பதில் தித்திப்புக் காண்பார்கள். பழந்தமிழ் இலக்கியம் கண்ட சொல்களைச் சொன்னால் ஏற்றுக் கொள்ளாது எதிர்ப்பார்கள்; வெறுப்பார்கள். தமிழைப் பகைக்கும் உள்ளங்களில் தமிழன்பும் தாய்மொழிப்பற்றும் கூற வழிகாட்டுதல் வேண்டும். 'வடமொழிச் சொற்கள்-கன்னடம், தெலுங்கு மலையாளம் முதலிய மொழிகளை இணைப்பன' என்று ஓர் இசைக்கல்லூரி முதல்வர் என்னிடம் வழக்காடினர். நான் கூறினேன் : 'கன்னடம் தெலுங்கு, மலையாளம் இவை திராவிடமொழிகள். இம் மொழிகளை இணைப்பது திராவிடநாட்டின் தொன்மைத் திராவிடமொழியே' என்று வடமொழிதான் திராவிடமொழிகளைப் பிரித்தது, பிரிக்கின்றது. வடமொழிச் சொல்கள் வந்தேறியவையே. தென்னக மொழிகளில் ஆங்காங்குச் சில இடங்களில் பதிந்து விட்டவைதாம் வடமொழிச் சொல்கள். வடசொல்கள் திராவிட மொழிகளை இணைக்கின்றன என்று கூறுவது விரல்களின் நுனியில் உள்ள நகங்கள் விரல்களை இணைக்கின்றன என்பது போன்றது. இதனை விடுத்து மேலும் கருத்தில் தொடர்வோம்.

இசையியலுக்கு ஆசிரியர்கள் :

தெலுங்குக் கீர்த்தனைகளைப் பெரிதும் கற்றவர்களைத் தமிழிசையியல் கற்பிக்கக் கல்லூரிகளில் அமர்த்தும் வழக்கும் இருந்து வருகிறது. தெலுங்குக் கீர்த்தனை மேதைகட்குத் தமிழிசையியலோ, இசைத்துறைத் தமிழ்ச் சொல்களோ, பாட்டிலும் தொகையிலும் சிலம்பிலும் வந்துள்ள குறிப்புகளோ தெரியாது. இவர்களால், தமிழிசையியலை வெறுக்கவும் பகைக்கவும் முடியும். இந்நிலையை மாற்றத் தமிழக அரசு திட்டம் வகுக்குமா? தமிழ்நூல்களினின்றும் தொகுத்துத் தமிழிசையியல் வெளியிடுதல் வேண்டும்; அதனைக் கற்பிக்க இசைத்தமிழ் இயற்றமிழ் வல்லுநர்களை அமர்த்துதல் வேண்டும். கீர்த்தனை இலக்கண நூல்கள் வெளியிடல் வேண்டும்; கீர்த்தனையின் தொன்மை தோற்றம் வளர்ச்சிபற்றி ஆராய்தல் வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால் அறிவனவருமாறு :

I, தமிழ் இலக்கிய இலக்கண நூல்களிலிருந்தும், உலகம் பெரும் இசை இலக்கண நூல்களிலிருந்தும்-புதிய இசையியல் நூல்கள் வெளிவரல் வேண்டும்.

II. இசைத் துறைச்சொல் அகராதி ஒன்று தொகுக்கும் கூட்டு முயற்சி மலர்தல் வேண்டும்.

III. தமிழக அரசு, இசைக்கலைக் களஞ்சியம் தொகுக்கத்திட்டம் வகுத்தல் வேண்டும்.

IV. கீர்த்தனைகளின் தோற்றம் தொன்மை வளர்ச்சிபற்றி ஆராய்ச்சிகள் அரும்புதல் வேண்டும்.

V. சென்னைத் தமிழிசைச்சங்கம் இசையின் பல்வேறு துறைகளையும் ஆண்டுதோறும் ஆராய்தல் நலம் பயக்கும்.

VI. தமிழிசையியல், தமிழிசை வரலாறு முதலிய நூல்களை ஆங்கிலத்திலும் பிற ஐரோப்பிய மொழிகளிலும் எழுதிப்பாரெலாம் பரப்புதல் வேண்டும்.

VII. புது இசைக்கருவிகளைக் கண்டுபிடிக்க முயலல் வேண்டும்; புதுப்புது இசைக் கருவிகளை இசை அரங்குகளில் பயன்படுத்தல் வேண்டும். மறந்து மங்கிக் கிடக்கும் இசைக் கருவிகளை வழக்குக்குக் கொண்டுவருதல் வேண்டும்.

———

மயக்கத்தினின்று எழுமின் !

நம் முத்தமிழ்ச் சான்றோரின் வழித் தோன்றிய தமிழ் மக்காள் விழித் தெழுமின்! இதுகாறும் ஆரிய மாயத்திற் சிக்குண்டு அறிவு மயங்கித் தூங்கிய பெருந் தூக்கத்தினின்றும் விழித் தெழுமின்கள்! இனி ஆரிய மொழியையும் ஆரிய வேதங்களையும் நம் திருக்கோயில்களில் ஓதுதலை அறவே ஒழித்துத் தேவார திருவாசக நாலாயிரப் பாடல்களையே ஓதி, அவற்றிலுள்ள மந்திரங்களாலேயே அம்மையப்பருக்கு எல்லா வழிபாடுகளையும் ஆற்றி, இறைவன் திருவருளால் இம்மை மறுமைப் பயன்களை ஒருங்கெய்துவீர்களாக!

—மறைமலையடிகள்

(வேளாளர் நாகரிகம், பக். 119)

இலக்கணக் கோவை-ஒரு மதிப்பீடு

[பேராசிரியர், டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.]

(முன் இதழ் ௬௬௦ஆம் பக்கத் தொடர்ச்சி)

15. ஆண் பெண் விகுதிகள்; பொது விகுதிகள் :

தமிழில் வடசொற் கலப்பினால் வந்து இணைந்த புதிய ஆண்; பெண் விகுதிகளாகிய —வான், —வதி; —காரன், —காரி ஆகிய வற்றை இந் நூலாசிரியர் ஏற்றுக் கொண்டுள்ளார்; அவ்வாறே இருபாற் பொது விகுதிகளாகிய—ஆளி, —சாலி என்பவற்றையும் விதந்தோதியுள்ளார்; வளர்ந்து வரும் மொழிமாற்றங்களை ஆசிரியர் கூர்ந்து நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (57to59)

எ - டு: புண்ணியவான், குணவதி (—வான்—வதி)
வீட்டுக்காரன், வீட்டுக்காரி (—காரன், —காரி)
கொடையாளி, புத்திசாலி (—ஆளி, —சாலி)

16. வினைச்சொற் பாகுபாடு :

வினைச்சொற் பாகுபாடுகளைக் கூர்ந்து நோக்கி, அவற்றின் பொருள் வேறுபாடுகளைக் கொண்டு, மேலும் சில நுட்பங்களைக் கண்டு காட்டுகின்றது இந்நூல். தெரிநிலைவினை, குறிப்புவினை என்ற இரண்டு நிலைகளில் 'காலம் காட்டல்' என்ற ஒரே திறன் பற்றிப் பழந்தமிழ் பேசிற்று. இந் நூல் தெரிவிக்கும் புதிய வகைகள் :

(அ) தற்பொருட்டு வினை

எ - டு: அடித்துக் கொண்டான்

(ஆ) தேற்ற வினை

எ - டு: (க) வர வேண்டும்,
(கா) செப்பத்தகும்
(கி) அஞ்சப்படும்

(இ) வலிமை வினை

எ - டு; அடிக்க மாட்டுவான்

(ஈ) துணிபு வினை

எ - டு : (க) செய்துவிட்டான்
(கா) ஆடியொழிந்தான்

(உ) கூட்டு வினை

எ - டு : (க) உண்டாக்கினன்
(கா) காப்பாற்றினன்

இவற்றைக் குறிக்கும் நூற்பாக்கள் :

*''வினைமுதல் தொழிற்பயன் வினைமுதலுறுவது
தற்பொருட்டாமெனச் சாற்றப்படுமே''* (70)

*''வேண்டும் தகும்படும் என்பவை தோன்றித்
தேற்றப் பொருள்படும் தேற்றவினையே''* (71)

*''மாட்டென் விகுதி யிடைவரப்பட்டு
வன்மை யுறுத்தற் பொருளைத் தருவது
வலிமை வினையென வரையப்படுமே''* (72)

*''விடு ஒழி என்னும் விகுதிகள் பெற்றுத்
துணிபுப் பொருள்படும் துணிபுவினையே''* (73)

*''சிலவினைப் பகுதிகள் சேர்ந்தொரு சொல்லாய்க்
கூடும் வினைச்சொற் கூட்டுவினையே''* (74)

17. எதிர்மறை இலக்கணமும் பாகுபாடும் :

எதிர்மறை வினைக்குப் பழந்தமிழ் இலக்கணப் பனுவல்கள் இலக்கணம் கூறவில்லை. இந் நூல் பின்வருமாறு வரையறை தந்துள்ளது :

*''வினைநிகழாமையை யுணர்த்தும் வினைச்சொல்
எதிர்மறை யென்றே இயம்பப் படுமே''* (76)

இரண்டு எதிர்மறைச் சொல் இணைந்து வருவதும், மூன்று எதிர் மறைச் சொல் இணைந்து வருவதும் என இரண்டு வகைப்படுத்தி, முன்னது உடன்பாட்டுப் பொருளை உணர்த்தும் என்றும் (77) பின்னது எதிர்மறைப் பொருளை உணர்த்தும் என்றும் (78) கூறியுள்ள வேறுபாடு உணரத்தக்கது.

18. முன்னிலைவினை—ஏவல்வினை வேறுபாடு :

முன்னிலைவினை, ஏவல்வினை வேறுபாட்டை இலக்கணக் கோவை இனிது உணர்த்துகின்றது. (1) கால முன்றையும்

காட்டுதல், (2) படர்க்கை வினைக்குப் பாங்காதல் (3) முன்னின்றான் தொழிலை உணர்த்துதல்—மூன்றுமே முன்னிலைவினைக்கு இலக்கணம் என்பார். (83) (1) முன்னிலை ஒன்றற்கே உரியதாதல் (2) தன்மை, படர்க்கை இனம் இல்லாமை (3) எதிர்காலத்தில் மட்டும் வருதல் (4) முன்னின்றானைக் கட்டளை இடுவது—ஆகிய நான்கும் ஏவல்வினைக்கு இலக்கணமாக இந் நூல் இயம்புவன. இவ் வேறுபாடு விளங்க எடுத்துக்காட்டுகளும் தரப்பட்டுள்ளன. இரண்டையும் ஒன்றாக மயங்குவார்க்கு இவ் வேறுபாடு இனிது புலப்படுத்தும் வரையறையாக உள்ளது என்று கூறலாம்.

19. இன்மை—அன்மை வேறுபாடு :

தமிழில் உள்ள எதிர்மறைக் குறிப்பினை இரண்டாக்கி, அவற்றின் பொருள் வேறுபாட்டினையும் நூற்பாவாக்கியுள்ளனர் இக் கோவையாசிரியர்; உரையாசிரியர்களால் விளக்கப்பட்ட வேறுபாடு நூற்பா வடிவம் பெறுகிறது இங்கு.

''இல்லாமையைச் சொலல் இன்மையாம் என்றும்
இனமானதைச் சொலல் அன்மையாம் என்றும்
எதிர்மறையின் குறிப்பு இருவகைப்படுமே'' (86)

20. ஏவல்—வியங்கோள் வேறுபாடு :

ஏவலையும், வியங்கோளையும் ஒன்றாக எண்ணிக் குழம்புவாரும் உண்டு. அவர்களைத் தெளிவித்து இரண்டும் வெவ்வேறு இயல்பின என்று தெளிவு காட்டுகின்றது இந் நூல். (1) கட்டளைப் பொருள் பெறல். (2) முன்னிலைக்கே உரியதாதல். (3) பன்மை, ஒருமைப் பாகுபாடு ஏற்றல்—இவை ஏவல்வினைக்கு இந் நூல் தரும் வரையறை எனலாம்; (1) வாழ்த்தல் முதலிய பல்வகைப் பொருள்களையும் ஏற்றல். (2) பால், இடம் எங்கும் வரல் (3) பன்மை ஒருமைப் பாகுபாடு பெறாமை—ஆகிய மூன்றே வியங்கோளுக்கு இலக்கணம். இவ்வாறு வேறுபாடு புலப்படுத்துகின்றது இந் நூல். (90, 91)

''செய'' என்னும் வாய்பாட்டு வினை எச்சம் :

செய என்னும் வாய்பாட்டு வினை எச்சம் காரணப் பொருளிலும், காரியப் பொருளிலும் வரும் என்றும், முன்னது இறந்த காலத்தும், பின்னது எதிர் காலத்தும் வரும் என்றும் கூறுகின்றது இந் நூல்.

எ - டு: மழை பெய்ய நெல் விளைந்தது.
(காரணப் பொருள்—இறந்த காலம்)
நெல் விளைய மழை பெய்தது,
(காரியப் பொருள்—எதிர் காலம்)

22. வசனவகை மூன்று எனல்:

உரைநடை இலக்கணத்தையும் இந்நூல் விடாது வரையறுக்க முயன்றுள்ளது. ஆனால் உரைநடைப் பாகு பாட்டையே காட்டியுள்ளது. (1) வெள்ளை (2) முடுகு (3) அலங் காரம்-என்ற மூன்று வகையில் வசனம் எழுதப்பெறுவதைச் சுட்டுகின்றது. (121)

''வெள்ளை முடுகோ டலங்காரம் என
வசனம் எழுதும் வகை மூன்றுமே,''

தம்காலத்தும் அதற்குச் சற்று முன்னும் வழங்கிய பாரதவசனம், பஞ்சதந்திர வசனம், நாவலர் நான்காம் பாலபாடவசனம். முதலியனவற்றை இவற்றுக்கு முறையே எடுத்துக் காட்டுக்களாக இதன் ஆசிரியர் காட்டியிருக்கின்றார்.

23. வட்டாரமொழி பேச்சு வழக்கு:

தமிழ்நாட்டு வட்டார வழக்குக்களைக் கூர்ந்து நோக்கிய இந் நூலாசிரியர், அப்பேச்சு வழக்குக் கூறுபாடுகளை இசைந்து சில நூற்பாக்களை வழங்கியுள்ளார்.

(1) சாப்பிட்டுவிட்டேன் (-விடு-)
(2) வந்திட்டேன் (-இடு-)
(3) அடித்துப்போட்டான் (-போடு-)
(4) மரித்துப் போனான் (-போ-)
(5) செய்யமாட்டுவேன் (-மாட்டு-)

என்று வழங்கும் வழக்குக்களை எடுத்துக்காட்டி, அசைநிலைப் பொருளில் இவற்றிற் குறிப்பிடப்பட்ட வினைப்பகுதிகள் வழங்கப் பெறுவதைக் காட்டியுள்ளார். இந்நூல் தன்காலத்துப் பேச்சு வழக்குகளைக் கூர்ந்து நோக்கியுள்ளமைக்கு இது சான்றாகும்.

''விடு இடு போடு போ மாட்டு முதலிய
வழக்கிலசைநிலைப் பொருளில் வருமே'' (122)

24. தனிமொழிகள்

இக்கால மொழியியலார் ‘Critics’ என்றும், ‘Particles’ என்றும், கூறிப்பிரிப்பனவற்றை இந்நூல் ‘தனிமொழிகள்’ என்று குறிக்கின்றது. இத் தனிமொழிகள் (1) இணைப்பு (2) விரோதம் (3) ஏது (4) நிமித்தம் (5) பிரிப்பு முதலிய பொருள்பட வாக்கியங்களையும், வளர்மொழிகளையும் இணைக்கும் நிலையில் விளக்குகின்றன என்று தெளிவுபடுத்துகின்றது :

‘‘வளர்மொழிகளையும் வாக்கியங்களையும்
இணைப்பு, விரோதம், ஏது, நிமித்தம்
பிரிப்பு முதலிய பொருள்படச் சேர்த்துத்
தங்குவன வெலாம் தனிமொழியாமே’ (123)

இதற்குத்தக்க எடுத்துக்காட்டுக்களையும் இக் கோவை குறித்துள்ளது :

(1) -ஆல் (2) -உம் (3)-ஏ (4) -ஆகவே (5) -இருக்க (6) -அன்றி (7) -இன்றி (8)-தவிர (9) -மேலும் (10) -இனி (11) -எனவே (12)-ஏனென்ருல் (13) -ஆனபடியினுல் (14) -அல்லாமலும் (15) -இருந்த போதிலும் (16) -அதன்பின் (17) -இல்லாவிட்டால் (18) -என்ருலும் (19)-அப்படியிருக்க (20) -என (21) -என்றபோதிலும் (22)-ஆனுலும் (23) -போல் (24) -ஆகிலும் (25) -இருக்கவே (26) -ஆனுல் (27) -இன்னும் (28) -ஆக (29) -ஏனெனில் (30) -ஆனபோதிலும் (31) -இல்லையானுல் (32) -ஆகில் (33) -அதற்குமேல் (34) -அல்லவென்ருல் (35) -என்னிலும் (36) -இனிமேல் (37)- ஒழிய (38)- ஆகட்டும் (39) -என்றபோதைக்கும் (40) -இருந்தாலும் (41) -இன்றியும் (42) -கூட (43) -ஆகி.

25 விளியிடைச் சொற்கள் :

சில சொல் வழக்குக்களைக் கூர்ந்து நோக்கி அவற்றிற்கு விளியிடைச் சொற்கள் என்ற பெயர் கொடுத்துப் பாகுபடுத்தி யுள்ளது இந் நூல். விளித்துப் பேசுங்கால் இத்தகு இடைச் சொற்கள், இன்பம், துன்பம் முதலிய மன உணர்ச்சிகளை உணர்த்திவருவன என்கின்றது இது :

‘‘இன்ப துன்பம் விருப்பு வெறுப்பு
உருக்கம் கோபம் வியப்பு முதலிய
மனவுணர்ச்சிகளை உணர்த்தி வருவன
விளியிடைச் சொல்லென விளம்பப்படுமே’’ (124)

இதற்குத் தக்க எடுத்துக் காட்டுக்களாகப் பின்வருவனவற்றை இந் நூலாசிரியர் காட்டியுள்ளார் : (1) -ஐயோ- (2) -அப்பா- (3) -அடடா- (4) -ஐயையோ- (5) -ஓகோ- (6) -தோலோ தோல்- (7) -பளபள- (8) -சீசீ- (9)- கூகா- (10) -காணும்- (11) -கூகூ- (12) -அடியே- (13) -அகோ- (14) -நேர்த்தி நேர்த்தி- (15) -அம்மம்மா- (16) -பத்திரம்- (17) -ஐயோ சாமி- (18) -இந்தா- (19) -ஆகா- (20) -கெட்டி கெட்டி- (21) -அந்தோ- (22) -பிள்ளாய்- (23) -ஆஆ- (24) -அடா- (25) -அடி- (26) -இதோ- (27) -ஓய்- (28) -ஏ- (29) -பாவம்- (30) -அடே-

இவற்றுட் சில சொற்கள் இடைச்சொற்களாக அன்றிப் பெயர்ச் சொற்களாக உள்ளமை கூர்ந்து நோக்கத்தக்கது. ஆனல் அவை இடைச் சொற் பொருண்மை பெற்று வருவதால், இவற்றுட் சேர்க்கப்பட்டுள்ளன என்று உணரலாம். நாடக வழக்காக இவற்றுட் பல சொற்கள் இடையிடை வழங்கப்பட்டுவருவன என்று காணலாம்.

'செந்தமிழ்ச் செல்வி' கட்டுரையாளர்கட்கு

செந்தமிழ்ச் செல்விக்குக் கட்டுரைகள் எழுத விழையும் அன்பர்கள் புதிய கருத்துக்கள் நிரம்பிய அறிவியல் கட்டுரைகளையும், இலக்கிய வரலாற்று, சமயக் கட்டுரைகளையும், புத்துரைகளையும் எழுதியனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுவதோடு, கட்டுரைகள் 5 அல்லது 6 பக்கங்கட்கு மேற்படாதிருக்குமாறு பார்த்துக் கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

—ஆசிரியர்

முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி மறைவு

நாட்டு விடுதலைப் போரில் பெரும்பங்கு கொண்டவரும் தொழிற்சங்கத் தலைவராயிருந்தவரும், தமிழக அரசில் அமைச்சராகவும், மூன்று மாநிலங்களில் ஆளுநராகவும், பின்னர்த் துணைக் குடியரசுத் தலைவர், குடியரசுத் தலைவர் என்று பல்வேறு அரசியற் பொறுப்புகளை ஏற்று, ஏறக்குறைய 65 ஆண்டுகள் நாட்டு நலன் நாடி உழைத்தவருமான வி. வி. கிரி என்று அழைக்கப்படும் திரு. வராககிரி வெங்கடகிரி அவர்கள் தமது 85ஆவது அகவையில், 24—6—80இல் சென்னையில் காலமானார் என்ற செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறோம்.



உயர்திரு கிரி அவர்கள் 1894ஆம் ஆண்டு ஆகஃச்டு மாதம் 10ஆம் நாள் ஒரிசாவிலுள்ள பெர்காம்பூரில் ஜோகியா பந்துலு என்னும் நாட்டுப் பற்றாளரின் இரண்டாவது மகனாகத் தோன்றினார். இவர் இளைஞராக இருந்தபோது திரு. கோபாலகிருட்டிண கோகலேயின் கருத்துக்கள் இவரைப் பெரிதும் கவர்ந்தன. பெர்காம்பூரில் துவக்கக் கல்வி கற்றபின், சென்னைக்கு வந்து சீனியர் கேம்பிரிட்ஜ் படித்துவிட்டுச் சட்டம் பயில்வதற்காக டப்ளின் சென்றார்.

1914இல் இவருக்குக் காந்தியடிகளின் தொடர்பு ஏற்பட்டது. 1916இல் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். தமக்குக் கிடைக்கவிருந்த வட்ட நடுவர் (முன்சீப்) பதவியை வேண்டாமென்று மறுத்துத் தம் சொந்த ஊரான பெர்காம்பூர் சென்று அங்கு ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றுவதையே விரும்பினார். இப்படிப்பட்ட வேளையில்தான் காந்தியடிகளின் நாட்டு விடுதலைப்போர் இவரது உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. 1921இல் அறப்போரில் ஈடுபட்டார். 1922இல் மதுக் கடைகளின் முன் மறியல் செய்த குற்றத்திற்காக 3 மாத சிறை ஒறுப்புக்குள்ளானார். பின்னர்ச்

சிறையினின்று விடுதலை பெற்றதும் தொழிற் சங்கப் பணியில் பெரிதும் ஆர்வங் கொண்டார். தொடர் வண்டித்துறையில் (Railway) ஒரு வேலை நிறுத்தத்தைத் தாமே முன்னின்று நடத்தி அதில் வெற்றியும் கண்டார். அடுத்துத் தென்மராட்டியத் தொடர் வண்டித்துறை (M. S. M.), மைசூர் மாநிலத் தொடர் வண்டித் துறை ஆகியவற்றின் தொழிலாளர் சங்கத் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

1935இல் நாடாளுமன்ற உறுப்பினரானார். அதனையடுத்துச் சென்னை மாநிலச் சட்டமன்றத் தேர்தல் வந்தது. அதில் பொப்பிலி தொகுதியில் பொப்பிலி அரசரை எதிர்த்துப் போட்டி யிட்டு வெற்றி பெற்றார். அப்போது திரு இராசகோபாலாச்சாரியார் தலைமையில் நிறுவப்பட்ட சென்னை மாநில அமைச்சரவையில் திரு கிரி அவர்கள் தொழிலாளர் அமைச்சராகப் பதவியேற்று தொழிலாளர்க்குப் பல நன்மைகள் செய்தார்.

1938இல் திட்டக்குழுச் செயலாளராக அமர்த்தப் பெற்றார். பின்னர் 1946இல் நடைபெற்ற மாநில சட்டமன்றத் தேர்தலில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பெற்றார். திரு. பிரகாசம் தலைமையில் அமைக்கப்பட்ட சென்னை அமைச்சரவையில் தொழிலாளர் அமைச்சராக அமர்ந்து தொடர்ந்து தொழில் உலகிற்குத் தொண்டு செய்து வந்தார்.

நாடு விடுதலை பெற்றபின் 1952இல் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அப்போது நடுவண் அரசில் அமைந்த அமைச்சரவையிலும் இவர் தொழிலாளர் அமைச்சராகப் பொறுப்பேற்றார். ஆனால் இப் பதவியில் இவர் மிகக் குறுகிய காலமே இருந்தார். வங்கி ஊழியர் மன்றத் (Tribunal) தீர்ப்பில் மாறுதல்கள் செய்யப் பட்டதை எதிர்த்து இவர் தமது அமைச்சர் பதவியைத் துறந்தார்.

இங்ஙன மெல்லாம் பல பதவிகளை ஏற்று நாட்டுத் தொண் டாற்றிய இவரை நாடி ஆளுநர் பதவியும் வரலாயிற்று. 1957இல் உத்தரப்பிரதேச ஆளுநர் ஆனார் அடுத்துக் கேரளம், கருநாடகம் ஆகிய மாநிலங்களிலும் ஆளுநராகப் பதவியேற்றார்.

1967இல் டாக்டர் சாகிர் உசேன் குடியரசுத் தலைவராக இருந்தபோது இவர் துணைக் குடியரசுத் தலைவராக விருந்தார். 1969இல் டாக்டர் சாகிர் உசேன் காலமானதையடுத்துத் திரு கிரி அவர்களே குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு கிரி அவர்கள் ஓய்வு பெற்ற பின்னரும் பொதுப் பணிகளில் ஈடுபட்டிருந்தார். சென்னையில் குடியேறியபின் சென்னை


மாநகரை அழகியதொரு நகரமாகச் செய்யப் போவதாகக் கூறினார். இவருக்கு எப்போதும் தொழிலாளர் நலத்தில் அக்கறை உண்டு. ஆகவே இவர் தமது ஓய்வு காலத்தில் சென்னையில் ஒரு தொழிற் சங்கத்தைத் தோற்றுவித்தார். நடுவண் அரசு இவருக்குப் 'பாரத ரத்தினா' என்னும் தலைசிறந்த விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளமையே இவரது பொது வாழ்வின் சிறப்புக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

இங்ஙனம் பல்லாற்றானும் நாட்டுக்கு நற்பணிகள் பல ஆற்றிய கிரி அவர்கள் தமிழ் மொழியிடத்தும் நம் கழகத்திடத்தும் நீங்காத பற்றுக்கொண்டிருந்தார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். கழகம் நடத்திய விழாக்களுக்கு இவர் தமது வாழ்த்துரைகளை வழங்கத் தவறியதேயில்லை. மறைந்த இத்தகைய பெருந்தகையாளர் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

———

திரு. சஞ்சய் காந்தி மறைவு

கடந்த 23—6—80இல், திருமதி இந்திராகாந்தி அவர்களின் இளைய மகனார் திரு. சஞ்சய் காந்தி தமது 33ஆவது அகவையில், விண்ணூர்தி வீழ்ச்சியின் காரணமாகக் காலமானார் என்ற செய்தியறிந்து நாடே அதிர்ச்சியுற்றதுபோல நாமும் பேரதிர்ச்சியுற்றோம்.



திரு. சஞ்சய் காந்தி, இந்திராகாந்தி அம்மையாரின் இளைய மகனாராக 1946ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 14ஆம் நாள் பிறந்தார். அவர்தம் பாட்டனார் பண்டித சவகர்லால் நேரு அவர்களின் இல்லத்திலேயே வளர்ந்து வந்தார். டேராடூன் என்னுமிடத்திலுள்ள டூன் துவக்கப் பள்ளியில் கல்வி கற்கத் துவங்கினார். பின்னர் 1961இல் தில்லி கொலம்பாஸ் பள்ளியில் சேர்ந்து 1963இல் சீனியர் கேம்பிரிட்ஜ் படிப்பை முடித்துக் கொண்டு இலண்டன்மாநகர் சென்று, அங்கு ரோல்ஸ்ராய்ஸ் நிறுவனத்தில் உந்துப் பொறியியல் (Motor Engineering) பயிற்சி பெற்றார்.

மீண்டும் 1966இல் இந்தியாவுக்கு வந்து, உந்து வண்டிகள் செப்பனிடும் பணியில் ஈடுபட்டார். பின்னர்த் தாமே 'மாருதி கார்' என்ற பெயரில் சிறிய உந்துகள் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். எனினும் நாடாளுமன்றத்தில் இத் திட்டத்திற்கு எதிர்ப்பு தோன்றியபடியால் 'மாருதி' வெளிவர இயலாமற் போயிற்று.

1971இல் நடைபெற்ற தேர்தலின் போதுதான் இவர் முதன் முதலாக அரசியலில் ஈடுபட்டுப் பொதுக் கூட்டங்களில் பேசத் துவங்கினர். 1977 பொதுத் தேர்தலில் நாடாளுமன்ற மக்களவைக்கு 'அமிதி' என்னும் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியுற்ருர். அப்போது ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற சனதா அரசினர் இவர்மீது பல வழக்குகளைத் தொடர்ந்தனர், ஒரு வழக்கில் 30 நாள் சிறை ஒறுப்புக்குள்ளானர். இதனாலும் அடுத்துச் சில அரசியல் போராட்டங்களில் பங்கு கொண்டதாலும் பொது வாழ்வில் இவர்தம் புகழ் பெருகலாயிற்று.

திரு சஞ்சய், போர்ப்படைத் தலைவர் டி. எஸ். ஆனந் என்பவரின் மகள் மேனகா என்பவரை 1974 திசம்பர்த் திங்களில் திருமணம் செய்துகொண்டார்.

1979இல் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களில் இவருக்குப் பெரும்பங்கு உண்டு. அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பேராயக் (காங்கிரஸ்) கட்சியின் சார்பில் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் இவர் காட்டிய ஊக்கம், மேற்கொண்ட உழைப்பு அரசியல் சூழ்ச்சித்திறன் இவையனைத்தும் பலரும் கண்டு வியக்கும் வண்ணமிருந்தன. அத்துடன் இவர் அமேதி தொகுதியில் போட்டியிட்டு ஏறக்குறைய ஓரிலக்க வாக்குகள் அதிகமாகப்பெற்று வெற்றி பெற்றதும் இவர்தம் புகழைப் பன்மடங்காக்கின.

இங்ஙனம் பல்லாற்ருனும் புகழேணியில் ஏறிக் கொண்டிருந்த இந்த இளைஞரின் எதிர்பாராத மறைவு நாட்டிற்குப் பேரிழப்பே யாகும். மறைந்த சஞ்சய் காந்தியின் அன்னையார்க்கும், அவர்தம் குடும்பத்தார்க்கும், இளைஞர் பேராயத்தாருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

———

திரு. சின்ன அண்ணாமலை மறைவு

மூதறிஞர் இராசாசி அவர்களால் 'சின்ன அண்ணாமலை' எனச் சிறப்பிக்கப் பெற்றவரும். பேச்சாற்றல், எழுத்தாற்றல், செயலாற்றல்களை ஒருங்கே பெற்றவரும், அரசியலில் பெரிதும் ஈடுபாடு



டையவரும், ஒரு சிறந்த நூற்பதிப்பாளராகத் திகழ்ந்தவருமான திரு. சின்ன அண்ணாமலையவர்கள், கடந்த 18-6-80இல் தம்முடைய மணிவிழா நாளில் — உற்றுரும் உறவினரும் நண்பரும் அவர்தம் மணிவிழாவினைக் காணக் காத்திருந்த வேளையில் அத்துணை பேரும் அதிர்ச்சியுறும் வகையில் இதய நோயினுல் தாக்கப்பெற்றுத் தம் இன்னுயிர் நீத்தார் என்ற செய்தியறிந்து யாமும் துணுக்குற்று வருந்துகிறோம்.

1930ஆம் ஆண்டிலிருந்தே அரசியலில் முனைப்பாக ஈடுபட்டவர் அண்ணாமலை. பேராயக் கட்சியில் சேர்ந்து காந்தியடிகள், நேரு பெருமான், காமராசர் ஆகிய பெருந்தலைவர்களோடு தொடர்பு கொண்டு மிக விரைந்து முன்னேறிய அரசியலாளர் இவர். இவரது நாட்டுப்பற்று பலரும் கண்டு வியக்கத்தக்க உறுதிப்பாடுடையது. எதிலும் எதிர்நீச்சல் போடும் இயல்பினர். சிறைக் கஞ்சாச் செயல் வீரர். அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு பலமுறை சிறை ஒறுப்புக்குள்ளானவர். வெள்ளையர் ஆட்சியில் அடக்குமுறைகளால் சொல்லொணுத் துன்பமுற்றும் தமது விடுதலை வேட்கையினை விட்டுக்கொடாத கொள்கை வீரராகத் திகழ்ந்தார். அரசியல் ஈடுபாடுகளுக்கிடையேயும் இவர் தமிழ்மொழிப் பற்றிலும் அதனை வளர்ப்பதிலும் பேரார்வம் கொண்டிருந்தார். அதன் விளைவாக 'தமிழ்ப்பண்ணை' என்னும் பதிப்பகம் ஒன்றினைத் துவக்கிப் பல அரிய தமிழ் நூல்களைப் பதிப்பித்துள்ளார். நம் கழகத்திடமும் கழக ஆட்சியாளரிடமும் நீங்காத பற்றுக்கொண்டவர்.

கடந்த சில ஆண்டுகளாக நடிகர் திலகம் சிவாஜிகணேசன் மன்றத்தின் தலைவராக இருந்து பல்வேறு தேர்தல்களில் இந்திரா காங்கிரசுக்காகக் கடுமையாக உழைத்துள்ளார்.

இத்தகைய நல்லாரின் மறைவு அரசியல் உலகிற்கு மட்டுமன்றித், தமிழ் இலக்கிய உலகிற்கும் பேரிழப்பாகும். மறைந்த சின்ன அண்ணாமலை அவர்களின் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

என்றும் துன்பமே!

[புலவர் ப. எழில்வாணன், பள்ளபட்டி.]

தீயவன் சென்ற வழியும்
திருவினை இழந்த வாழ்வும்
நாயகன் என்ற செருக்கும்
நன்மை கொன்ற செயலும்
பேயவன் பெற்ற பொருளும்
பெண்வழி செய்த தொழிலும்
[1]காயகன் சொன்ன மொழியும்
கால மெல்லாம் துன்பமே!

கிளைஞன் இன்றி வாழ்வதும்
கீழ்மை சொல்லி மகிழ்வதும்
கொலைஞன் உறவை நாடலும்
கொள்ளை அடிக்க முயல்வதும்
இளைஞன் தலைமை ஏற்பதும்
இருவழி விரும்பிச் செல்வதும்
கலைஞன் வாழ்வைப் பழிப்பதும்
காணும் உலகில் துன்பமே!

வஞ்சகன் உறவைத் தேடலும்
வாழ்வியல் முறையை வெறுப்பதும்
நஞ்சக னுடனே செல்வதும்
நாகம் வீட்டில் வளர்ப்பதும்
[2]அஞ்சலன் அருகில் துயில்வதும்
ஆசை பெரிதாய்க் கொள்வதும்
[3]தஞ்சிலன் வழியில் ஆய்வதும்
தரணியில் என்றும் துன்பமே!

1. காயகன் – மயக்குவோன். 2. அஞ்சலன் - பகைவன்.
3. தஞ்சிலன் - அறிவிலன். (தஞ்சன் - அறிஞன், தஞ்சு + இல் + அன் = தஞ்சிலன்)

புதையல்

சேலம் நகராண்மைக் கல்லூரிக்கு உரையாற்ற வந்தார் ஒருவர். அவர் "வசந்தசேனு" என்பதில் உண்டாகும் இன்பமும் எண்ணக் கிளர்ச்சியும் 'இளவேனிற் படை' என்பதில் உண்டா?" என்றார்.

அப்பொழுது ஆங்கிருந்த மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் 'தாயுமானவர்' என்பதில் உள்ள இன்பமும் எண்ணக் கிளர்ச்சியும் 'மாத்ரு பூதம்' என்பதில் உண்டா? இருளில் ஒரு முரட்டு உருவத்தைப் பார்த்து 'மாத்ரு பூதம்' என்றால் கேட்டவன் அச்சத்தால் வீழ்ந்துபடுவானே" என்றார்.

—கலைமணி

செய்திகளும் குறிப்புக்களும்

அருள்மிகு தண்டபாணி அடிகள் 82ஆவது குருபூசை விழா

திருவாமாத்தூர் கௌமார மடாலயம் அருள்மிகு தண்டபாணி அடிகளின் 82ஆவது குருபூசை விழாவும் 9ஆவது ஆண்டு இலட்சார்ச்சனை வழிபாட்டு விழாவும், முறையே 30-6-80; 1-7-80ஆம் நாள்களில் திருவாமாத்தூர் கௌமார மடாலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. 30-6-80இல் பேரூர் ஆதினம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் இலட்சார்ச்சனை வழிபாட்டைத் தொடங்கி வைத்தார்கள். 1-7-80இல் புலவர் திரு. தி. மு. சங்கரலிங்கம் வரவேற்புரை வழங்க, தொழிலதிபர் நா. மகாலிங்கம் அவர்கள் மடாலய வாயிலினைத்திறந்து வைக்க, தவத்திரு திருநாவுக்கரசு சுவாமிகள் தொடக்கவுரையாற்ற, சிரவை யாதினம் தவத்திரு சுந்தர சுவாமிகள் தலைமையுரை ஆற்ற தண்டபாணி அடிகள் 82ஆவது குருபூசை விழா இனிது நடை பெற்றது.

இவ்விழாவினை யொட்டி அருள்மிகு தண்டபாணி அடிகள் இயற்றிய "வண்ணமஞ்சரி" என்னும் நூலினைத் தொழிலதிபர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்கள் வெளியிட, கவிஞர் த. கோவேந்தன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். மற்றும் 'திருமகளந்தாதி' 'ஞாயிறு ஆயிரம்' என்னும் நூல்களும் வெளியிடப் பெற்றன. அவற்றை முறையே திரு. இராமச்சந்திரனார், திரு. கிருட்டிணமூர்த்தி ரெட்டியார் அகியோர் பெற்றுக் கொண்டனர். முதலிரு நூல்களைச் சென்னை பெட்டல்-அலாய்ஸ் உரிமையாளர் திரு. முருகேசன் செட்டியார் அவர்களும், பிறிதொரு, நூலைத் தமிழ்ப் பதிப்பகத்தாரும் பதித்து வழங்கியமை பாராட்டத்தக்கது. திரு. மு. சுப்பையா அவர்கள் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

டாக்டர். ம. பொ. சி. அவர்களின் 75ஆவது பிறந்த நாள்விழா

தமிழகச் சட்ட மன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் முனைவர் ம. பொ. சிவஞானம் அவர்களின் 75ஆவது பிறந்த நாள் விழா 6-7-80 ஞாயிறு மாலை மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில், சட்டமன்றப் பேரவைத்தலைவர் க. இராசாராம் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடை பெற்றது. இராசா சர் டாக்டர் முத்தைய செட்டியார் விழாவைத் தொடங்கி வைத்தார். தமிழக முதல்வர் மாண்புமிகு ம. கோ. இராமச்சந்திரன், நாவலர் நெடுஞ்செழியன், அறநிலைய அமைச்சர் வீரப்பன், கு.சா. கிருட்டிணமூர்த்தி, மற்றும் பல பெருமக்கள் வாழ்த்துரை வழங்கினர். சிலம்புச் செல்வர் அவர்கட்கு நமது வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை நினைவு விழா

திருச்சிராப் பள்ளி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 29-6-80 அன்று சங்க மன்றத்தில், திரு. இரா. கிருட்டிணசாமி ரெட்டியார் அவர்கள்

தலைமையில் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் நினைவுவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அறிஞர் பெருமக்கள் பலர் உரையாற்றினர். பிள்ளையவர்கள் நினைவாக திருவண்ணாமலை சைவசித்தாந்த நல்லாசிரியர் புரிசைகிழார் சு. முருகேச முதலியார் அவர்கட்குப் பொற்கிழி வழங்கப் பெற்றது. பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ் நன்றியுரை நவில விழா இனிது முடிந்தது.

பேராசிரியர் கா. மாயாண்டி பாரதி அவர்களின் மணிவிழா

திருநெல்வேலித் தனித்தமிழ் இலக்கியக் கழகத்தின் இருபதாம் ஆண்டு விழாவும் பேராசிரியர் கா, மாயாண்டி பாரதி, க.மு., கீ. க. தே. அவர்களின் மணிவிழாவும் பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியில் 28-6-1980 காரிக் கிழமை மாலை ஆறுமணிபளவில் தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் சாலை இளந்திரையன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றன.

கழகத்தலைவர் பேராசிரியர் பா, வளன் அரசு, க.மு., கல். இ. அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

கழகப் புரவலர் சேர்மிகு சுந்தரனார் சார்பில், கம்பன் கழகத் தலைவர் பேராசிரியர் கிருட்டிணன், க, மு, பேராசிரியர் கா, மா, பாரதி அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்துப் பாராட்டுரை வழங்கினார்.

கழகத் துணைத் தலைவர் 'சொற்செல்வர்' சி, சு, மணி, க, இ, தில்லித்திருவேங்கடவன் பல்கலைக் கழகப் பேராசிரியை சாலினி இளந்திரையன், ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். பேராசிரியர் கா. மா. பாரதி நன்றி தெரிவித்தார். புலவர் அப்பாசாமி நன்றி நவில விழா இனிது முடிந்தது.

'அச்சும் பதிப்பும்'' அறிமுகவிழா

பொது நூலகத்துறை, சென்னை மாநகர நூலக ஆணைக்குழு சார்பில் 37ஆவது நூல்கள் அறிமுகவிழா கடந்த 21—6—1980 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை இராயப்பேட்டை லேனார்டு தெருவிலுள்ள கிளை நூலகத்தில் நடைபெற்றது.

அவ்வமயம் திரு. மா. சு. சம்பந்தன் எழுதிய அச்சும் பதிப்பும் பற்றி, சென்னை மாவட்ட நூலகத்தில் பணியாற்றும் திரு. கொ. செ. ஞானதேவ் பி. ஏ., பி லிப்., எல். பி. டி. அவர்கள் கருத்துரை படித்தார்கள். கவிஞர் திரு. அரங்க சீனிவாசன் அவர்கள், 'இந்திய தத்துவ ஞானம்' என்னும் திரு. இலட்சுமணன் எழுதிய நூலைப் பற்றி கருத்துரை வழங்கினார். நூலகர் அனைவரையும் வரவேற்றார். நூலாசிரியர் சார்பில் திரு. மா. சு. சம்பந்தன் நன்றி தெரிவித்தார். இவ் விழாவிற்கு ஏராளமான பேர் வந்திருந்து சிறப்பித்தனர். நாட்டுப் பாடலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

'கொங்கு நாட்டு நடுகற்கள்' பற்றிய ஆய்வு

கூவலூர், தமிழ்மக்கள் வழக்காற்றுத் தொகுப்புக் குழுவின் சார்பில், முறையே 13, 14, 15—6—80ஆம் நாள்களில் ஈரோடு

வாசவி கல்லூரியில் வரலாற்றுக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அதில் 'கொங்கு நாட்டுப் பாடல்கள்; கொங்கு நாட்டுப் பழமொழிகள் ஆகிய தலைப்புக்களில் ஆய்வுரைகள் வழங்கப்பட்டன. அப்போது 'கொங்குநாட்டு நடுகற்கள்' என்னும் ஆய்வுக் கட்டுரையினைப் புலவர் பொ. மு. முனியப்பன், அவர்கள் வழங்கினார்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை
(செல்வி சிலம்பு ருச-ருகக ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு.	வ. சுப்பையா பிள்ளை அவர்கள் கழக ஆட்சியாளர்	ரூ. 10—00
,,	ஆ. சுப்பையாபிள்ளை அவர்கள், கழக மேலாளர்	5—00
,,	A. T. A. ஈசுவர் அவர்கள், சென்னை	5—00
,,	ந. முருகன், திருச்சி (திருமண நன்கொடை)	10 00
திருமதி	ஆர். வி. சரோஜா	100 00

மதிப்புரை

விநாயக கவசம்—விளக்கவுரை

[ஆசிரியர்: வித்துவான் க. வா. சச்சிதானந்தம், இராசேசுவரி பதிப்பகம், 17/6 பீட்டர்ஸ் காலனி, சென்னை-14. விலை ரூ, 1-80]

முழுமுதற் கடவுளாம் சிவபெருமானுக்கும் முந்திய படியில் வைத்து எல்லாராலும் வணங்கப்படுபவர் விநாயகக் கடவுள். எனவே தான் விநாயகர்மீது போற்றிப் பாடல்களும், புகழ்ப்பாடல்களும் யாண்டும்பரவியிருத்தலைக் காண்கிறோம், அவற்றுள் விநாயக கவசம் எல்லாராலும் மனப்பாடம் செய்தற்குரிய ஒரு நல்ல தெய்வப் பனுவல் ஆகும். அத்தகைய நூலுக்கு வித்துவான் சச்சிதானந்தம் அவர்கள் வரைந்திருக்கும் இந்த விளக்கவுரை புதிய முறையில் அமைந்திருக்கிறது. நூலாசிரியர் வரலாறு, நூலின் சிறப்பு, விநாயகத் திருவுருவின் தத்துவ விளக்கம் ஆகியவற்றுடன் படிப்போர்க்குச் சுவையும் பயனும் தரவல்லசிரிய விளக்கவுரையாக அமைத்திருக்கும் ஆசிரியரின் முயற்சி பாராட்டத் தக்கது.

வண்ணமஞ்சரி

[ஆசிரியர்: அருள்மிகு வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள். பதிப்பாளர்: திரு. வி. முருகேசஞ் செட்டியார். அவர்கள். பிஸ்வநாத் மெட்டல் & அலாய்ஸ், வண்ணாரப்பேட்டை, சென்னை-21. விலை: ரூ. 3-00]

இற்றைக்கு 140 ஆண்டுகட்கு முன் நெல்லையில் சைவவேளாளர் மரபில் தோன்றி இளமையிலேயே முருகன் திருவருள் கைவரப்பெற்று சந்தப் பாடல்களைப் பாடும் ஆற்றல் பெற்றவர் அருள்மிகு தண்டபாணி அடிகள். இவர் இயற்றிய பாடல்கள் ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்டவை என்றும், முருகன் மீது ஏற்பட்ட ஊடல்காரணமாக இவரால் அழிக்கப்பட்டவை போக எஞ்சியுள்ளனவே இவை என்றும் கூறப்படுகிறது.

இவர்தம் பாடல்கள் அருணகிரியார் பாடல்கட்கு ஈடாக சந்தச் சுவை நிரப்பியன, அவற்றுள் ஓலைச் சுவடியினின்று ஒரு சில பாடல்களே வண்ணமஞ்சரி என்னுந்தலைப்பில், இப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. பாடல்கள், நற்றுய் இரங்கல், பாலனைப் பழித்தல், கலவிமகிழ்தல் இன்னோரன்ன 13 தலைப்புக்களில் சுவைபட அமைந் தள்ளன. இப் பாடல்கட்குக் குறிப்புரை சேர்க்கப்பட்டிருக்குமானுல் மேலும் பொருள் விளக்கம் பெற ஏதுவாயிருக்கும். அடிகள் வேறு உரைநடை நூல்களும் இயற்றியுள்ளனர் என்பது இந்நூலின் முன்னுரையினின்று அறியக் கிடக்கின்றது. அவையும், எஞ்சியுள்ள அவர்தம் பாடல்களும் நூல் வடிவில் வெளிவருமாயின் தமிழகம் அடிகளின் ஆற்றலை அறிந்து இன்புறும் என்பதில் ஐயமில்லை.

என்றும் இளமை (கவிதைகள்)

[ஆசிரியர்: 'கலைமாமணி,' 'கவிஞர்கோ' புத்தனேரி ரா. சுப்பி ரமணியம். தமிழ்க்குடில் 14, செனடால்ப் முதல்தெரு, சீதம்மா எக்ஸ் டென்ஷன், சென்னை-18 விலை: ரூ 18.00]

கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம் அவர்களைப் பற்றி, தமிழ் இலக்கிய உலகிற்குச் சிறப்பாகக் கவிஞர் உலகிற்கு, நாம் எடுத்துக் கூறத்தேவையில்லை. அவர்தம் எழுத்தாற்றல் நாடறிந்த ஒன்று. 'என்றும் இளமை' என்னும் இக் கவிதைத் தொகுப்பு என்றும் நிலைத் திருக்கக் கூடிய இனிய-அரிய இலக்கியமாகும். இவர்தம் பாடல்கள் பலவற்றில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் புதுமைக் கருத்துக்களும் புரட்சிக் கருத்துக்களும் எதிரொலிக்கக் காணலாம். தமது நாட்டுப் பற்று, மொழிப்பற்று, இனப்பற்று ஆகியவற்றை ஆங்காங்கே மிக நுணுக்கமாகப் பதியவைத்துள்ளார். "தமிழியக்கம்" என்னுந்தலைப்பில் இவர் வரைந்துள்ள பாடல்களினூடே,

"நலமெல்லாம் பொலிந்தாலும் தமிழ்நாடு
பிறர்கையில் நலியும் இந்த
நிலையாதற் கிடம்ஈந்த தேனென்று
நினைக்குங்கால் விளைநி லத்தில்
பலவாகக் களைதோன்றிப் பயிர்வளரத்
தடையாகப் பரவல் போலே
நிலையான தமிழ் நாட்டைச் சதிகாரர்
தந்திரமாய்த் தாழ்த்த லானுர்!"

எனவரும் அடிகள் பல்லாற்றுனும் தமிழகத்தின் உண்மை நிலையினை உணர்த்தும் அடிகளாகும். இன்னும் இது போன்ற பல எடுத்துக் காட்டுகள் மூலம் கவிஞரின் உள்ளக் கிடக்கைகளை விளக்கலாம். விரிவஞ்சி விடுக்கின்ருேம். 'என்றும் இளமை' என்றும் படித்து இன்புறவேண்டிய ஓர் அரிய கவிதைத் தொகுப்பு. படித்துப்பாருங்கள்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா

கழகப் புதிய வெளியீடுகள்

புள்ளியியல் (Statistics)

ஆசிரியர் : எம். சங்கர நாராயணன், எம்.ஏ., பி.எஸ்ஸி.

தமிழில் வெளிவரும் புள்ளியியல் நூல் இதுவே எனலாம். புள்ளியியலேத் தமிழில் அறிய விழைவோர்க்கு இந்நூல் பெரிதும் உதவும். பொது நூலகங்களில் இடம்பெற வேண்டிய அரிய நூல். ரூ. 8 00

கண் பாதுகாப்பு

ஆசிரியர் : டாக்டர். என். எஸ். சுந்தரம், M. S., D. O.
கண் மருத்துவர், ஸ்டான்லி மருத்துவமனே, சென்னே.

கண்ணிற்கு வரும் நோய்கள், விபத்துக்கள், பிறவிக் குறைபாடுகள் இன்ன பிற இடர்ப்பாடுகளிலிருந்து கண்களேப் பாதுகாப்பது எப்படி என்பதுபற்றிக் கூறும் நூல். படங்களுடன் கூடிய-அழகிய-பயனுள்ள புத்தகம். ரூ. 6 00

தோல் பாதுகாப்பு

ஆசிரியர் : டாக்டர் எம். நடராஜன்.

தோலின் அமைப்பு, அதன் பணிகள், தோலுக்கு வரும் நோய்கள், அவற்றை நீக்கும் முறைகள் இன்னபிற செய்திகள் இந் நூலின்கண் நன்கு விளக்கப்படுகின்றன. ரூ. 4 00

மூவர் தேவாரத் திரட்டு

1 முதல் 7 திருமுறைகள் மூவர் தேவாரம் என வழங்கப் படுவது போல, 'மூவர் தேவாரத் திரட்டு' என்னுந் தலேப்பில் ஒரு நூல் இதுகாறும் வெளிவந்ததில்லே. அதனே நிறைவு செய்யு முகத்தான் தேவாரப் பாடல்களினின்று 1470 திருப் பாடல்களேத் திரட்டி 'மூவர் தேவாரத் திரட்டு' என்னும் பெயரமைத்து அழகிய கையடக்கமான பதிப்பாக இந்நூல் வெளியிடப் பெறுகிறது (அச்சில்)

கழக இலக்கியச் செம்மல்

புலவர் இரா. இளங்குமரன் எழுதிய நூல்கள்

மதுரைக் கோயில் வரலாறு ரூ. 6 - 00

வளர்புகழ் வள்ளுவம் ரூ. 2 - 00

தமிழ் இலக்கியத்தில் இயற்கை ஓவியம் ரூ. 4 - 00

சொல்லியன் நெறிமுறை-1 அகல்

இந்நூல் ஒரு வரிசையாகத் தொடர்ந்து வெளிவரும். இதன்கண் சொல்மூலம், அதன்இணேப்பு, தழைப்பு, விரிவாக்கம் ஆகியனவும் பொருள்வள வளர்ச்சியும் விளக்கப்பெறும். இம் முதல் நூலில் அகல் என்னும் சொல் ஆராயப்படுகிறது. இவ் வரிசை நூல்களால் தமிழின் தொன்மை, சொல்மூலம் ஆகியன விளக்கப்பெறுவதுடன் தமிழில் காணப்பெறும், கொச்சைச் சொற்களும் வழுக்களும் களேய வாய்ப்புக் கிட்டும். ரூ 2 50

அப்பர் அச்சகம், சென்னே-1.